# பணியகத்தில் நடைபெற்றவை







புனித சூசையப்பர் ஆலயத்தில் 03-10-2021ல் நடை பெற்ற பன்னாட்டுத் திருப்பலி



ஒப்புரவு அன்னை ஆலயத்தில் 28-11-2021ல் நடை பெற்ற புனித சிசிலியம்மாள் விழா



ஒப்புரவு அன்னை ஆலயத்தில் 08-12-2021ல் நடை பெற்ற அமல உற்பவ மாதா திருவிழா
மரியாயின்சேனை விழா




# உறவுகள்
Uravukhal

தை மாசி பங்குனி 2022


கடவுளே! எம்மீது இரங்கி,
எமக்கு ஆசி வழங்குவீராக!


Amonerie Tamoule catholique Srilankaise 57, Bld de Belleville, 75011 - PARIS - FRANCE. இதழ் 81

இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப்பணியகத்தின் காலாண்டுப் பத்திரிகை


## மன்னிப்பின் பாதை தவக்காலம்



அருள்தரும் ஆண்டினை அறிவிக்கவே - இயேசு பிறந்தார்

# உறவுகள்
Uravukhal

**தலைவர்:**

அருட்பணி: போல் மத்தியூ மதன்ராஜ்
பணியக இயக்குனர்

**உறவுகள் குழு:**

திரு: என். எம் ஜெயரட்ணம்
திருமதி: றெஜீனா சிவகுமாரன்
திரு: சில்வெஸ்ரர் தம்பிராசா
திரு: ஆனந்தன் செபமாலை
திருமதி: தயாளினி வில்லியம் றெஜினோல்ட்
திருமதி: ஏஞ்சல் யேக்கப்
செல்வி: புளோறன்ஸ் யாழ்நிலா

**செய்திகள் தருபவர்:** திரு: ரி. எம். சந்தியாகு



**தொடர்புக்கு:**

« URAVUKAL »
Aumônerie Tamoule Catholique
Srilankaise
Chapelle Notre Dame Réconciliatrice
57, Bld de Belleville
75011 Paris - France

**Tel:** 01 48 06 95 05
**E - mail:** uravukhal.france@gmail.com
**Website:** www.uravukal.org



**வெளியீடு:**
இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் - பிரான்ஸ்

No 81
2021

**சந்தா விபரம்**
தனிப்பிரதி ஒன்று: 2€
வருடச் சந்தா விபரம்: 20€
ஏனைய நாடுகளுக்கு: 22€

**கணினி வடிவமைப்பு:** றெஜீனா சிவகுமாரன்


## ஆசிரியர் எண்ணம்

மலர்ந்திருக்கும் இந்த நத்தார் புதுவருடமானது
எம் உள்ளங்களிலும் இல்லங்களிலும்
சாந்தியும் சமாதானமும் மலர
அந்த எல்லாம் வல்ல இறைவன்
என்றுமே தனது ஆசீரை அணையாமல்
எங்கள் மேல் ஒளிரச் செய்வாராக

அன்று பெத்லேகேமில் மிக எளிமையாக இடம்பெற்ற குழந்தை இயேசுவின் பிறப்பு, இன்று உலகம் முழுவதும் இணைந்து கொண்டாடும் ஒரு பெருவிழாவாக காணப்படுகின்றது.

இந்த அதிசயமிக்க அற்புத நிகழ்வானது அன்று இஸ்ராயேல் மக்கள் பல்லாயிரம் வருடங்களாக தம்மை அடிமைத்தனத்திலிருந்து மீட்க மெசியா பிறப்பாரென எதிர்பார்த்ததாக, நாம் திருவிவிலியத்தில் காண்கின்றோம். இன்றும் அதே மனித இனம் தனது இனத்தின் விடியலைத் தேடி சொந்த நாட்டிலேயே அகதியானது மட்டுமல்ல, புலம் பெயர்ந்து அகதியாக அலைவது வரலாறாக இருந்தாலும், அதே மெசியா நம்மை மீட்க வந்தார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை,

உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக (லூக்கா 2:14) என்று வானதூதர்கள் பாடியது, உள அமைதி தொடங்கி உலக அமைதி வரைக்கும் என்பதாகும். அமைதியை உருவாக்குவதே கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி என்பதை நாம் உணர்ந்தவர்களாக செயற்பட, இந்த மலர்நந்திருக்கும் நத்தார் புதுவருடமானது எம்மை அழைத்து நிற்கின்றது. ஆகவே குழு சேர்ந்து சதிசெய்து குழிபறிக்கும் முயற்சிகள், பல்வேறு முரண்பாடுகள், போட்டி பொறாமைகள் அனைத்தையும் களைந்து அமைதியான சமுதாயம் மலர, எம் உள்ளங்களில் அமைதி என்னும் பாலன் இயேசுவை தீபமாக ஏற்றி மலர்ந்திருக்கும் இந்த புதிய வருடமானது எமக்கு ஒரு ஒளியாக மாற அந்த இறைவனை தொடர்ந்து பிராத்திப்போமாக.

ஆண்டவர் இயேசுவினுடைய பிறப்பு விடுதலையும் சமாதானமும் மட்டுமல்ல, பாவத்தின் அடிமையில் வாழ்வோர் விடுதலை பெறவும், ஏழைகள் புறம் தள்ளப்பட்டோர் மறுவாழ்வு பெறவும் அனைவரும் ஒன்றுபட்டு வாழ வரம் வேண்டி, மலர்ந்திருக்கும் இப் புத்தாண்டை மன மகிழ்வுடன் வாழ மன்னவனாம் மறை பொருள் எமக்கு ஆசி வழங்குவாராக.

இனிய வாழ்த்துக்கள்!!

உறவில் நிலைக்கும்...

அருட்பணி: போல் மத்தியு மதன்ராஜ். அ.ம.தி



## பணியகச் செய்திகள்



திருமண ஆயத்தம் பெறவிரும்புவோர் 3 மாதத்திற்கு முன்பாக அருட்பணியாளருடன் தொடர்பு கொள்ளவும்.

**12-02-2022 சனி**
**06-03-2022 ஞாயிறு 9 - 17 மணிவரை**
**திருமண அருட்சாதன வகுப்பு, பெல்வில் சிற்றாலயத்தில் நடைபெறும்.**

திருமுழுக்கு ஆயத்தம் பெற விரும்புவோர் ஒரு மாதத்திற்கு முன்பாக அருட்பணியாளருடன் தொடர்பு கொள்ளவும்.



**திருமுழுக்கு ஆயத்த வகுப்பு**

**தை:** புதன் 26ந் திகதி - சனி 29ந் திகதியும்
**மாசி:** புதன் 23ந் திகதி - சனி 26ந் திகதியும்
**பங்குனி:** புதன் 23ந் திகதி - சனி 26ந் திகதியும்
பெல்வில் ஆலயத்தில் நடைபெறும்

### தை - பணித்தளத் திருப்பலிகள்

**23-01-2021 குழந்தை இயேசு பணித்தள விழா**
12:30 Saint Yves - 93330 - La Courneuve

**23-01-2021 புனித செபஸ்தியார் திருவிழா**
11:30 Chapelle NDR. de Belleville – 75011 - Paris

### மாசி - பணித்தளத் திருப்பலிகள்

**06-02-2022 -புனித டொன்பொஸ்கோ திருவிழா**
12:30 Eglise St. Joseph des Nations-75011-Paris

### பங்குனி - பணித்தளத் திருப்பலிகள்

**02-03-2022 - திருநீற்றுப்புதன்**
17:00 Chapelle NDR. de Belleville –75011 - Paris

### இறைவார்த்தை

**குழந்தாய், ஆண்டவரிடம் பற்றுறுதி கொள். அவர் உனக்குத் துணை செய்வார். உன் வழிகளைச் சீர்படுத்து அவரிடம் நம்பிக்கை கொள். (சீ.ஞா. 2:6)**

## 50வது ஆண்டு திருமண நிறைவு விழா !





Garges les Gonesse புனித அந்தோனியார் பணித்தளத்தைச் சேர்ந்த திரு. மரியநாயகம், திருமதி. புல்கேரியா ஆகியோர் கடந்த 20-10-2021 அன்று, தமது 50வது திருமண நிறைவு நாளையும், திருமதி. புல்கேரியா அவர்கள் தனது 75 வது பிறந்த நாளையும் நன்றித் திருப் பலியுடன் ஒப்புக்கொடுத்தனர். எமது ஆன்மீகப்பணியக இயக்குனர் அருட்பணி மதன்ராஜ் அடிகளாருடன், எமது ஆலயபங்கின் அருட் தந்தையர்களும் சேர்ந்து இத்திருப் பலியை நிறைவேற்றினர். இப்பங்கின் பணியக அங்கத்தவர் களும், பாடகர் குழாமும், உறவினர்கள், நண்பர்களுடன் சேர்ந்து, திருப்பலியைச் சிறப்பித்தனர். திருப்பலியின் முடிவில், அவர்கள் கௌரவிக்கப்பட்டனர். இவர்கள் எல்லோருக்கும் இதயம் நிறைந்த நன்றிகளையும், அன்பையும் தெரிவிக்கின்றோம்.









# குறுக்கெழுத்து புதிர்

**போட்டி இலக்கம் 76**

**லேவியர் நூல் {1-20 அதிகாரம் வரை}**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | 2 | | | | |
| | 3 | | | 4 | | 5 | | 6 | |
| 7 | | | | | | | | | 8 |
| | | | 9 | 10 | | | | | 11 |
| | 12 | | | | | 13 | | | 14 |
| 15 | | 16 | | | | 17 | | | |
| 18 | | | | | | | 19 | | |
| | 20 | | 21 | | | 22 | | | |
| | 23 | | | 24 | | 25 | | | 26 |
| | | | 27 | | 28 | | | | 29 |

### இடமிருந்து வலம்

1. பலிப்பீடத்தின் மேலிருக்கும் இரத்தத்திலும் சிறிது எடுத்து .........மேலும்
2. திருப்பொழிவு எண்ணெயில் கொஞ்சம் வார்த்து அவரை .............படுத்தும்படி
3. மோசே.............ஆண்டவர் கட்டளையிட்டபடி செய்தார்.
5. தலைமுடி முதிர்ந்து .........வர் மொட்டையானால்
6. இது உங்கள் தலைமுறை தோறும்.........த நியமமாக
7. அதன் இனம்......... அதன் இனம் தீக்கோழி கூகை
12. தன் உடைகளைத் துவைத்து, தன் உடலை ............. நீரில் கழுவி
15. அருவருக்க வேண்டியவை ..........கருடன், கடலூராஞ்சி.
16. உயிருள்ள..........யை குடியிருப்புக்கு வெளியே
17. இது உங்கள்.............தோறும் மாறாத நியமமாக
18. குற்றம் நீக்கும் பலியின்..........யில் இருந்து சிறிது எடுத்து
19. ..........வலக்கை விரலை அதில் தோய்த்து ஏழு முறை
20. புளிக்காரம்..........எதையுமே ஆண்டவருக்கு
21. நெருப்பில் இருக்கிற...........களின் மேல் எரியூட்டுவார்.
22. வெள்ளாட்டுக்குட்டியையோ.......... போக்கும் பலியாகக்
23. அவற்றின்மேல்.........குடல்களிடத்தில் இருக்கும் கொழுப்பும்
25. அதை தூயதலத்தில் உண்ணவேண்டும். அது மிகத்.............
28. அதன் தலையின்மேல்.............அவர் புதல்வரும் தங்கள்

### மேலிருந்து கீழ்

1. நீ இஸ்ராயேல் மக்களிடம் மாடு........வெள்ளாடு
2. நுழையும்போது............இரசத்தையோ, மதுவையோ
5. அனைத்தும் விலக்குக் காலப்படுக்கைக்கு.............
7. நான்கு................ஊர்வனவற்றையும் பலகால்களுள்ள
8. தலையில்...........அணிவித்து பாகையின்மேல்
11. உணவுப்படையலைக் கொண்டு வந்து தம்..........எடுத்து
18. கிடாய் குட்டிகளுள் ஒன்றையும்..............நீக்கும் பலி
24. ஒருவர் சிந்திக்காமல் வாய்விட்டு.............யிட்டபின்னர்

### வலமிருந்து இடம்

2. ஆண்டவரின்...........ஆர்த்திப் பலியாகக் கொண்டு
8. இஸ்ராயேல் மக்கள் கூட்டமைப்பு..........பாவம் போக்கும்
11. ஆரோனும் அவர் புதல்வரும் தங்கள்...........வைத்தனர்.
13. அது தோலில் தோன்றுகின்ற வெள்ளைத்............
14. தலைமுறை தோறும் மாறாத............. மாக விளங்கும்
17. அவற்றின் சடலத்தை எடுப்போர்..........உடைகளை
19. அதன்..............தம் கையை வைத்து சந்திப்பு
27. அவற்றால் குரு அவளுக்கு கறை..............செய்வார்
29. ..........கையில் எஞ்சியிருக்கும் எண்ணையில் சிறிது

### கீழிருந்து மேல்

4. ..........தன் நார்ப்பட்டு அங்கியை அணிந்து தன்
5. புதல்வியரும்..........தூய்மையான இடத்தில் வைத்து
6. செத்ததைத் தொடுகிறவர்...................வரை தீட்டு
9. அனைவருக்கும்...........கழுவாய நிறைவேறும்படி
10. குருகு............இராசானி அதன் இனம்
12. கால் நடையையோ, தீட்டான..............வனவற்றையோ
16. கிடாய் குட்டிகனில் உன்றையும்...........குற்றம் நீக்கும்
19. ஏனெனில் நோய் அவர்.............யில் உள்ளது
26. குடல்களை..........கொழுப்பும் அவற்றைச் சுற்றியுள்ள
27. நான் வழங்கும் கானான் நாட்டிற்கு................வந்த
28. ஆட்டு மந்தையில் இருந்து பிடித்த ஒரு பெண்........யோ

**குறுக்கெழுத்து போட்டியின் விடைகளை தயவு செய்து 05-03-2022 க்கு முன்பு பணியகத்திற்கு அனுப்பி வையுங்கள். நன்றி**



**நீங்கள் உங்கள் நம்பிக்கையோடு நற்பண்பும், நற்பண்போடு அறிவும், அறிவோடு தன்னடக்கமும், தன்னடக்கத்தோடு மன உறுதியும், மன உறுதியோடு இறைப்பற்றும், இறைப்பற்றோடு சகோதர நேயமும், சகோதர நேயத்தோடு அன்பும் கொண்டு விளங்குமாறு முழு ஆர்வத்தோடு முயற்சி செய்யுங்கள்.**

*[2 பேதுரு 1:5,6,7]*

K.GG



# வலிமையின் வாய்க்கால் தவக்காலம்!

### வாழவைக்கும் வலிமை வலம் வரட்டும்

ஒரு முனிவரின் கண்களில் மின்னல்! ஆம் எதிரே வந்துகொண்டிருந்தவர் ஓர் இளவரசர். இவர் ஏன் இங்கே வரவேண்டும்? என்ற வினா இதய வாசலைத் தட்டுவதற்கு முன் இளவரசர் தம் கேள்விக் கணையை முனிவரிடம் அனுப்பினார். " முனிவரே நான் வலிமை பெற எனக்கு வழிகாட்ட முடியுமா?" அதற்கு முனிவர் " உமக்கு அது நிறையவே உள்ளதே!" என்றார். இளவரசர் " எவருக்கும் இல்லாத வலிமை என்னிடம் மட்டுமே இருக்க வேண்டுமென்ற பேரவா எனக்குள் ஊற்றெடுக்கிறது என்றார். மேலும் " எவரும் என்னை வெற்றி கொள்ளக்கூடாது. அப்போதுதான் நான் யார் என்பதை எல்லாரும் புரிந்து கொள்வர்" என்று தன் விருப்பத்தை வெளிப்படுத்தினார். அதற்கு முனிவர் " நேற்று உம் அன்னையார் வந்து, ஒருவேளை எப்போதாவது என் மகன் இளவரசன் உம்மிடம் வந்து ' வலிமை' பெறும் வித்தையைக் கற்றுக்கொள்ள வழி கேட்டால், அந்த உதவியை நீர் செய்யலாகாது" என்று என்னிடம் கூறி " வலிமை என்றைக்குமே பிறரை வாழவைக்கும் ஊடகமாகத்தான் இருக்க வேண்டுமே தவிர, எவரையும் அழிக்கவோ அடிமைப்படுத்தவோ துணைபோகலாகாது என்பதையும் விளக்கினார்" என்றார். ஆம் தவக்காலத்தில் அன்பு செய்யும் ஆற்றலின் ஊற்றைக் காண வேண்டும். அடிமை விலங்கொடிக்கும் நெஞ்சுரத்தை நிறைவாகக்கொள்ளும் வரம் பெற வேண்டும்.

### வாய்க்கால் வழியட்டும், நோய்கள் அழியட்டும்

தவக்காலத்தை நாம் அருள் பெறும் காலமாகப் பயன்படுத்த வேண்டும். அதற்குத் திருஅவையும், திருவிவிலியமும் எண்ணற்ற வழிகளைக் காட்டுகின்றன. அதை உணர்ந்து அகத்தில் பதிப்போம். உண்மைகள் நிறையும், உடலில் உள்ள நோய்கள் மறையும்.

**உறவுகள் உயிர்க்கட்டும்** – யார் காரணமாக இருந்தாலும் சரி நம்மில், குழுமத்தில், குடும்பத்தில், சமூகத்தில் உறவுகள் மங்கி மடியும் நிலை ஏற்பட்டிருப்பதாக உணர்ந்தால், உள்ளத்தை ஊனமாக்கிக்கொண்டிருக்கும் ஈகோவை you go என்று கூறி விரட்டி விட்டு நல்லுறவை ஏற்படுத்தி நங்கூரமாக்கிக் கொள்வோம். அப்போதுதான் உயிரற்ற உறவுகள் உயிர்க்கும். அந்த உயிர்ப்பும் நிரந்தரமாகக் குடிகொண்டிருக்க வேண்டும். அவன் அந்தோனி தொடர் குடிகாரன். தற்செயலாக பெரிய வெள்ளி தியான சிந்தனையில் ஈடுபட்டான். எல்லோரும் அவனைச் சந்தேகப் பார்வையோடுதான் பார்த்தார்கள். ஏனெனில் அவர் குடித்துவிட்டு ஆடிய ஆட்டங்கள் பலவற்றைப் பார்த்தவர்கள் அவர்கள். அவன் இடைவேளை நேரத்தில் " இந்தக் குடிகார அந்தோனி இன்று இறந்துவிட்டான்" என்று தனது உருவம் பதித்த பதாகையை ஆலயத்திற்கு முன்பு நட்டு வைத்தான். எல்லாரும் நிம்மதி அடைந்தனர். பின்பு உயிர்ப்பு ஞாயிறு திருப்பலி முடிந்து எல்லாரும் வீடு திரும்பும்போது அதிகமாகக் குடித்துவிட்டு அந்தப் பதாகையை நிமிர்த்தினான். எல்லாரும் நீ திருந்தவே மாட்டாயா? என்று கேட்டதற்கு" குடிகார அந்தோனி மூன்றாம் நாள் உயிர்த்துவிட்டான்." என்றான். தவக்காலத்தில் நாம் மேற்கொள்ளும் தீர்மானங்கள் தற்காலிகமானதாக இருத்தலாகாது.

**இறைவேண்டல் தொடரட்டும்** " எல்லாமே இறைவேண்டலால் கூடும்" என்ற முதிர்ந்த நம்பிக்கையோடும் இணையற்ற எதிர்நோக்கோடும் செபத்தில் நிலைத்திருக்க வேண்டும். செப வேளையில்தான் எண்ணற்ற தடைகள் அனைவருக்கும். அப்போதுதான் நாம் கவனச் சிதறலுக்கு இடமின்றி இலக்கை அடையும்வரை போராடும் வெற்றி வீரனைப்போல செயல்பட்டு செபிக்க வேண்டும்.

### தான தருமங்களில் ஞானம் விளங்க வேண்டும்:

' ஏழைக்கு இரங்குதல் இறைவனுக்கே கடனளித்தல்' (காண். சீஞா) போன்றது என வேதம் கூறுகிறது. தவக்காலங்களில் செய்யும் தான தருமங்களில் ஞானம் விளங்க வேண்டும். தேவையில் உள்ளவரைத் தேடிப் போய் உதவுதல் மிகவும் போற்றத்தகுந்த செயல். எதிர்படும் தேவையாளருக்கு இறைவனின் இனிய இயல்புகளை வெளிப்படுத்தும் விதத்தில் நமது தான–தருமங்கள் அமைய வேண்டும். இதையே அன்னை திரேசா " நாம் பிறருக்குச் செய்யும் எவ்வித உதவியும் ஏதாவது ஒரு வடிவத்தில் நம்மிடம் திரும்பி வரும்" என்று கூறுகிறார்.

**ஒப்புரவாகுதல்:** தவக்காலத்தின் முக்கிய செயல்பாடுகளுள் ஒன்று நன்கு தயாரித்துக்கொண்டு ஒப்புரவு அருளடையாளத்தில் பங்கு பெறுதல் ஆகும். ஒப்புரவில் தன் நிலை உணர்தலும், மன்னிப்பை அனுபவித்தலும் அரிய வாய்ப்புக்களாக அமைகின்றன. இந்த ஒப்புரவு உண்மையான உறவாக்கமாக அமைய வேண்டும். ' ஒப்புக்கு உறவு' என்ற போக்கு மறைய வேண்டும்.

### திருப்பயணங்கள் மேற்கொள்ளுதல்

திருவழிபாட்டில் நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு பவனியும் (வருகைப்பவனி, காணிக்கைப்பவனி, நற்கருணைப்பவனி மேலும்...) நாம் விண்ணகத் திருப்பயணிகள் என்பதையே நினைவுபடுத்துகின்றன. இத் திருப்பயணங்கள் வெறும் நுகர்வு வெறியின் வெளிப்பாடாக அவர் அந்த ஆலயத்திற்குச் சென்று அதைச் செய்தார், இவர் இந்த ஆலயத்திற்குச் சென்று இதைச் செய்தார். நான் என்ன தரம் குறைந்தவனா, நான் இந்த இடத்திற்குச் செல்வேன் இப்படி நன்றாகச் செய்வேன் என்பதெல்லாம் வெற்று மனத்திருப்திதான். மேலும் தொலைத்தூரத் திருத்தலங்களுக்குத் திருப்பயணம் மேற்கொள்ளுதல் உள்ளூர் திருவழிபாட்டை ஓரங்கட்டுவதற்காக அல்ல, உண்மையான நேர்ச்சையை அர்ப்பண மனத்தோடு செய்து முடிக்க என்ற உயர் எண்ணம் மேலிட வேண்டும்.

மிகுதி.....9ம் பக்கம்

# அருட்பணித் திட்டமிடல் 2021ன் மையக்கருத்து

# ஆலய பணியாளரின் பொறுப்பும் பகிர்தலும்

ஆலயம் என்பது பங்குப் பணியாளர், பங்கு மக்கள் இணைந்து இறைபணி செய்யும் இறைசமூகம். பங்கு மக்கள், பல பக்திச்சபைகள் மூலம் பங்கின் ஆன்மீக வளர்ச்சியில் பங்கெடுத்து, அவர்கள் அன்றும் தாராள தார்மீக பணியின் வழியாக இறைமக்களை இறைவன்பால் ஈர்ப்பது மாபெரும் பொறுப்புச்செயல். ஆலயத்தில் பாடகர்குழாம், மரியாயின் சேனையினர், இளையோர் மன்றம், பீடப்பணியாளர் போன்ற பக்திச்சபைகள் இருக்கின்றன. அவற்றில் ஒவ்வொரு பக்திச்சபைக்கும் ஒவ்வொரு பொறுப்புக்கள் உள்ளன. ஒவ்வொரு பக்திச்சபையின் பொறுப்பாளரும் எவ்வாறு செயல்படவேண்டும் என்பதுதான் இன்றைய கருத்து.

பொறுப்பாளர் தனது நிலை என்ன என்பதை உணர்ந்து அதிகாரத்தால் அல்ல, தாழ்ச்சியுடன் தன் பொறுப்புக்களை உணர்ந்து பணி செய்ய வேண்டும். தன் கடமை எது? எப்படி செய்வது? என்ற கேள்விகளை எழுப்பி அதற்கு பதில் காண்பது. விரக்தியான நேரங்களில் அதை இதமாக மாற்றத் தெரிவது, பொறுப்புணர்வோடு செயல்படுவது போன்ற விடயங்களை அடிக்கடி சிந்திப்பது கூட ஒரு நல்ல பணியாளரின் செயல்பாடுகள். ஏனையவர்களுடன் நான் நடத்தும் எனது உரையாடலை நல்ல உள்ளத்துடன் உண்மையான உள்ளத்துடன் **{கோபம், காய்மகாரம், வஞ்சக எண்ணம் இல்லாமல்}** நடத்துகிறேனா? என்பதை உணரவேண்டும். இறைமக்களோடு அன்பு என்றும் ஆயுதத்தை பயன்படுத்த வேண்டும். அதுதான் உலகிலேயே பெரிய ஆயுதம் என்பதை உணர்ந்து செயல்படவேண்டும். பணிசெய்பவர் அடுத்திருப்பவர் சொல்லுக்கு செவிமடுக்க வேண்டும். அவர் சொல்ல வருவதை பணிவன்போடு பொறுமையாக செவிசாய்க்க வேண்டும். அப்பொழுதுதான் அங்கு ஒரு பரஸ்பர அன்பு உருவாகும். அந்த அன்பில்தான் ஒவ்வொரு பக்திச்சபையையும் கொண்டு செல்லவேண்டும்.

நமது பக்திச்சபைகளை, அரசியல் கட்சிகளைப் போலும், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் போலும் போட்டி பொறாமைகளால், இலாப கணக்குப் பார்க்காமல், அன்பையும் இரக்கத்தையும் அணிகலன்களாகக் கொண்டு வழிநடத்தப்பட வேண்டும். "நான், ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன்" (யோவான் 10:10) என்னும் இறைவார்த்தையை மையமாக வைத்து, நிறைவாழ்வை நிறைவாக பகிர்ந்துகொள்ள நாம் செயல்படவேண்டும். அந்த நிறைவாழ்விற்கு இறைவன் இயேசு முன்மொழிந்த விழுமியங்கள் பக்திச்சபைகளின் அடித்தளம் ஆகட்டும், அவை அனைத்தும் நமது வாழ்வாகட்டும்.

இறுதியாக, தான் செய்யும் எந்த வேலையென்றாலும் அது இறைவனுடைய வேலை, இறைவனுக்காக செய்யும் வேலை என்பதை உணர்ந்தால், அந்தப் பணியில் தூய்மை, அர்ப்பணம் இருக்கும். கிறிஸ்து எம்மை வழி நடத்துகிறார். நாம் கிறிஸ்துவுடன் பயணிக்கின்றோம் என்ற எண்ணத்துடன் நம் சேவைகளைச் செய்யும்பொழுது, இறைவனின் இறைதூண்டுதலால் அச்சேவை நிறைவானதாக இருக்கும். இவை நமக்காக, நமது நலன்களுக்காக என்றல்லாது, இறைவனுக்காக என்ற எண்ணம் நம்மை முழுவதும் ஆட் கொள்ளட்டும். நமது பணிகள், பொறுப்புகள் அனைத்தும் இறையாட்சியை இம்மண்ணில் விதைக்க, அதை முப்பது மடங்காக, அறுபது மடங்காக, நூறு மடங்காக அறுவடை செய்ய புறப்படுவோம்!

உ. மரியா






## விவிலிய அறிவுப்போட்டி - 75




1) சல்மான் போரில் யாரை அழித்தான்?
2) இஸ்ராயேல் மக்கள் கடவுளிடம் கேட்டது என்ன?
3) எப்ராயீம் தம் மக்களையெல்லாம் கூட்டிச் செல்வது எங்கு?
4) பாலை நிலத்தில் தன் திராட்சைக் குலைகளைக் கண்டது போல் ஆண்டவர் எதைக் கண்டார்?
5) விபச்சாரத்தில் ஈடுபடுகிறவர்களை எதற்கு ஒப்பிடுகிறார்?
6) பெத்தேலே உன் கொடிய தீவினைக்காக உனக்கு என்ன செய்யப்படும் என்று ஆண்டவர் கூறுகின்றார்?
7) இஸ்ராயேல் குழந்தையாய் இருந்தபோது ஆண்டவர் என்ன செய்தார்?
8) ஆண்டவர் நெறிகள் எப்படிப்பட்டவை?
9) வேற்றினத்தாரை நம்பி பாழாய்ப் போன இஸ்ராயேலுக்கு ஆண்டவர் கூறியது என்ன?
10) இஸ்ராயேலின் பாலமாகிய சிலைவழிபாட்டைக் கண்டித்து ஆண்டவர் கூறியது என்ன?

## விவிலிய பொது அறிவுப்போட்டி முடிவுகள் - 74

சரியான பதில்கள் (தானியேல் நூல்)

1) அரியோக்கு 2:14
2) பெல்சாட்சரின் 7:1
3) 60முள உயரம் 6முள அகலம். - பாபிலோன் நாட்டில் உள்ள தூரா எனும் சமவெளியில் 3:1
4) மேதியனாகிய தாரியு 6:1
5) பெல்தசாச்சர் 1:7
6) அஸ்பெனாசு 1:3
7) தாழ்ந்து பணிந்து வணங்காவிடில் அந்நேரமே தீச்சூளையில் போடப்படுவர் 3:6
8) மிக்கேல் 12:1
9) எல்லாக் காட்சிகளையும் கனவுகளையும் உய்த்துணரும் ஆற்றல் 1:17
10) தானியேல், அனனியா, மிசாவேல், அசரியா 1:19

### பரிசு பெறுபவர்கள் விபரம்

**1ம் பரிசு: திருமதி: டிக்மன் அருள்மேரி**
**2ம் பரிசு: திருமதி: ஜேம்ஸ் மேரி நீற்றா**

**ஏனையவர்கள்:**

1. செல்வி: செல்வி: யோ.சியாமளா
2. திருமதி: யோசவ் அன்னவதி
3. திருமதி: றெஜினா பிறிஜெட்
4. திருமதி: பிறிம்றோஸ் டலஸ்
5. திரு: விறெட் நிமேஸ்
6. திருமதி: கொன்சன்ரைன் கருணாமலர்
7. திருமதி: ஜேம்ஸ் மேரி நீற்றா
8. திருமதி: மேரி
9. திருமதி: யோண்சன் மேரி பீல்டா
10. திருமதி: லோறன்ஸ் அந்தனி ஜசந்தா
11. திருமதி: எம். என். எம். செல்வநாயகம்
12. திருமதி: யேசுதாசன் மேரி ஜொய்ஸ்
13. செல்வி: லூசியா மேரி
14. திருமதி: நீற்றா றோசலீன் செல்வரட்ணம்

## விவிலியத் தேடல்



### "அவர் வளர்க"

**{சென்ற பத்திரிகைத் தொடர்}**
**சென்ற பத்திரிகையில் பழைய ஏற்பாட்டின் திருச்சட்ட நூல்கள் வரலாற்று நூல்கள் பற்றிப் பார்த்தோம். தொடர்ந்து......**

#### ஞான நூல்கள் 7

யோபு, நீதிமொழிகள், இனிமைமிகு பாடல், திருப்பாடல்கள், சபை உரையாளர், சாலமோனின் ஞானம், சீராக்கின் ஞானம்

இராயேல் மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் பெற்றுக்கொண்ட பட்டநிலைப் பல்வேறு இலக்கிய வகைகளில் எழுதிய நூல்களே ஞானநூல்கள். இந் நூல்களில் மக்களின் நல் வாழ்வுக்கான தேவையான அறிவுகளும், நன்னெறிப் போதனை–களும் இடம் பெற்றுள்ளன. பிற்காலத் தலைமுறையினருக்கு பயன்படுவதற்காக இவை எழுதப்பட்டது.

#### இறைவாக்கினர் நூல்கள் – 18

ஏசாயா – யோவேல் – அபக்கூக்கு – எரேமியா – ஆமோஸ் – செப்பனியா – புலம்பல் – ஒபதியா – ஆகாய் – எசெக்கியேல் – யோனா – செக்கரியா – தானியேல் – மீக்கா – மலாக்கி – ஏசெயா – நாகூம் – பாருக்கு

இஸ்ராயேல் மக்கள் காலத்தில் இறைவாக்குப் பணி செய்தவர்களை இறைவாக்கினர் என்று அழைத்தனர். இவர்களே இந்நூலை எழுதியவர்கள். நூலின் அளவினை அடிப்படையாகக் கொண்டு இவற்றில் முதல் நான்கு நூல்கள் பெரிய இறைவாக்கினர் நூல்கள் என்றும், ஏனையவை சிறிய இறைவாக்கினர் நூல்கள் என்றும் அழைக்கப்படுகிறது.

#### அறிந்து கொள்வோம்

பழைய ஏற்பாட்டில் உள்ள தோபித்து – யூதித்து – எஸ்தர் –சாலமோனின் ஞானம், – சீராக்கின் ஞானம் – பாருக்கு, தானியேல் – இணைப்புக்கள் – ஆகிய ஏழு நூல்களையும் பிற கிறிஸ்தவ சபைகள் ஏற்றுக்கொள்வதில்லை. காரணம்:–

– இந்நூல்கள் எபிரேய மொழியில் எழுதப்படவில்லை
– இவை காலத்தால் பிந்தியவை
– பாலஸ்தீனாவிற்கு வெளியே எழுதப்பட்டவை.

ஆனால் நாம் (கத்தோலிக்க மதம்) ஏற்றுக் கொள்கிறோம். தொடக்க காலத்தில் இருந்தே திருச்சபை இந்நூல்களை பழைய ஏற்பாட்டு நூல்களாக ஏற்றுக் கொண்டது. கத்தோலிக்க திருச்சபை இவ் ஏழு நூல்களையும் இறை ஏவுதல் பெற்ற நூல்களாக அறிவித்துள்ளது. திரு விவிலியத்தில் இவ் ஏழு நூல்களையும் இணைத்திருமுறை நூல்கள் என அழைக்கின்றது. இவையே பிரதானமான காரணமாகும்.

**மீண்டும் மறு இதழில் தொடர்ச்சி.......**

## விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 75
## வெற்றியாளர்கள்



### விடுதலைப் பயணம் 21-40

1) **திருமதி: ஏ. ஜே. அன்னவதி**
2) **செல்வி: அன்ரன் சுதர்சன் விஜிதா**
3) **திரு: பெனடிக் பிரசாந்தன்**

1) திருமதி: எம். என். எம். செல்வநாயகம்
2) திரு: அருளப்பு கிறிஸ்ரியன்
3) செல்வி: றெமினி தேவசகாயம்
4) திருமதி: றீற்ரா செல்வரட்ணம்
5) திருமதி: றெஜினா பிறிஜெட்
6) திருமதி: உசா கிருபாகரன்
7) திருமதி: யேசுதாசன் மேரி ஜொய்ஸ்
8) செல்வி: சியாமளா யோசவ்
9) திருமதி: மேரி
10) செல்வி: லுசியா மேரி
11) திருமதி: யேசுதாசன் வேர்ஜினியா
12) திருமதி ஞானேந்திரன் நியோமி

## விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி 75 சரியான பதில்கள்

### விடுதலைப் பயணம் 21:40

**இடமிருந்து வலம்**

1 மன்றாடி 32:11
2 குரு 35:19
4 நீளம் 16:15
6 கலன்கள் 39:33
11 சித்திம் 25:31
12 கலயம் 30:24
13 வரைக்கும் 36:29
14 தண்டு 31:.8
16 இது 30:32
17 பொன் 32:24
18 ஆவி 31:3
23 கொடுமை 34:9
24 நான்கு 36:36
25 வேண்டு 32:11
26 காணிக்கை 35:24
27 மூடி 33:32

**வலமிருந்து இடம்**

2. குட்டி 32:20
3. தூபம் 35:19
7. இதுவும் 39:31
9. அதை 37: 17
12. கலவை 30:32
14. தம் 31:14
15. பலி 40:31
18. ஆரோன் 35:25
19. தூவி 32:20
20. உப்பு 30:35
24. நான்கு 38:2

**மேலிருந்து கீழ்**

1. மக்கள் 32:2
3. தூபப்பீடம் 35.15
4. நீலம் 36:35
5. ஒரு 37:3
7. இலை 31:11
11. சிவப்பு 36:35
12. கண் 31:30
14. தன் 32:27
17. பொறு 22:30
18. ஆடு 34:3
19. தூயக 36:4
25. வேளை 32:30

**கீழிருந்து மேல்**

5. ஒரு 39:14
8. கணக்கு 38:21
9. அப்பம் 35:13
10. தொப்பி 39:27
18. ஆடு 22:1
21. நன்கு 30:36
22. நாண் 33:22
26. காப்பு 36:22
27. மூன்று 38:14
28. கொண்டு 34:4

## திருமறைக் கலாமன்றத்தின் புதிய கௌரவ இயக்குனராக அருட்தந்தை அ.பி.ஜெய சேகரம் அடிகள் நியமிக்கப்பட்டார்

திருமறைக்கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குனர் அருட்திரு. நீ. மரியசேவியர் அடிகளாரின் மறைவுக்குப் பின்னர் ஓர் ஆண்டு கடந்த நிலையில் புதிய கௌரவ இயக்குனராக அருட்தந்தை அ.பி.ஜெயசேகரம் அடிகள் நியமிக்கப்பட்டார். 03.12.2021 அன்று காலை திருமறைக் கலாமன்ற தினத்தைச் சிறப்பிக்கும் முகமாக இடம் பெற்ற திருப்பலியின் நிறைவில் நடந்த ஒன்று கூடலில் இந்த அறிவிப்பை பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் அவர்கள் விடுத்தார். 50வருட குருத்துவப் பணியை நிறைவு செய்துள்ள ஜெயசேகரம் அடிகளாரை திருமறைக் கலாமன்றம் மாண்பேற்றியது.

நீண்டகால பணிவாழ்வும் நம் கலை வடிவங்களில் ஆழமான ஈடுபாடும் கொண்ட அருட்தந்தை அ.பி.ஜெயசேகரம் அடிகளாரின் புதிய நியமனம் உலகெங்கும் பரந்து வாழும் திருமறைக்கலாமன்ற உறுப்பினர்களிடையே பெரும் மகிழ்வை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தக் கலாமன்றம் இன, மத, மொழி வேறுபாடுகளைக் கடந்து, கலை என்ற தளத்தில் மனிதர்களை ஒன்றிணைத்து உலகின் பல நாடுகளிலும் புலம் பெயர்ந்த தமிழ் மக்களை, தமிழ்க் கலை வடிவங்களால் இணைத்து செயல்பட்டு வருகிறது.

## சிறுவர்களுக்கான விவிலிய வினா - 2021

1. திருமுழுக்கு யோவான் யூதேயாவின் பாலைநிலத்தில் பறைசாற்றி வந்த செய்தி யாது?
2. ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள் அவருக்காக பாதையை செம்மையாக்குங்கள் என உரைத்தவர் யார்?
3. திருமுழுக்கு யோவான் அணிந்திருந்த ஆடை?
4. நீங்கள் மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ப செயல்களால் நிறைவேற்றுங்கள் என திருமுழுக்கு யோவான் யாரிடம் கூறினார்?
5. இயேசு எவ்வாறு திருமுழுக்கு கொடுப்பார் என திருமுழுக்கு யோவான் கூறினார்?
6. இயேசு கோதுமையும். பதரையும் என்ன செய்வார்?
7. திருமுழுக்கு யோவான் உண்ட உணவு என கூறப்படுவது?
8 திருமுழுக்கு யோவான் , எங்கு திருமுழுக்கு கொடுத்தார்?
9. இயேசு யாரிடம் திருமுழுக்கு பெற்றார்?
10. திருமுழுக்கு யோவான் தாழ்மையுள்ளவர் என்பதை எடுத்துக்காட்டும் இறை வசனம்?

### சிரி....சிரி.....

போலீஸ்: பஸ் எப்படி விபத்தில் சிக்கியது?

டிரைவர்: அதான் எனக்கும் புரியல சார்... நான் நல்ல தூக்கத்தில இருந்தேன்.

மனிதனுக்கும் செல்போனுக்குமுள்ள ஒரு வித்தியாசம் என்ன?’
மனிதனுக்கு கால் இல்லைன்னா பேலன்ஸ் பண்ண முடியாது. செல்போனுக்கு பேலன்ஸ் இல்லைன்னா கால் பண்ண முடியாது.



# இறை நம்பிக்கை ஆண்டாக மலரட்டும் இனிதான இப்புத்தாண்டு

**வை**கறைப் பொழுதினிலே – புது
பொலிவுடன் மலர்ந்திருக்கும் – இவ்
இனிதான புத்தாண்டு
முதன்மையான நற்பண்புகளால் – முன்
நின்று எம்மை வழிநடத்தும்
திருச்சபையின் திருத்துாதர்பணி – யாவும்
நிலைவாழ்வில் நிலைத்திடவும்
உடல் உள உபாதைகள் – நீங்கி
இவர் கையிட்டுச் செய்யும்
காரியங்கள் வாய்த்திடவும்
எண்ணிய எண்ணமெல்லாம் – இமைப்
பொழுதில் ஈடேறிடவும்
இறையாட்சி மலர்ந்து – இறை
அழைத்தல்கள் பெருகிடவும்
ஏணிப்படியாக ஏற்றங்கள் – பல
தரப்போகும் இறைநம்பிக்கை
ஆண்டாய் மலரட்டும் – இனிதான இப்புத்தாண்டு

சிந்தை மிகு செயல்களாலே
சமூக அறம் சார்ந்த எம் தேசமதில்
அந்தகார சக்திகளின் ஆதிக்கத்தால்
சூழ்ந்துள்ள பாவங்கள், சாபங்கள்,
கருத்து மோதல்கள், பிரிவினைகள்,
யாவும் தூர விலகிடவும்,
ஏழை எளியோர்– வாடிடும் வறியோர்
மனக்குறை நீங்கி மனநிறைவுடன்
வாழவும், உறவுகள் மேம்படவும்,
உற்ற துணை கிடைத்திடவும்,
வரம் தரும் இறை நம்பிக்கை ஆண்டாய்
மலரட்டும் இனிதான இப்புத்தாண்டு!
வைகறைப் பொழுதினிலே – புது
பொலிவுடன் மலர்ந்திருக்கும் – இவ்
இனிதான புத்தாண்டு
வற்றாத செல்வ வளங்களை – பார்
எங்கும் நிறைந்திடவும்
நாளும் பொழுதும் நலிந்தோர்க்கின்றி
நயமாய் உழைத்திடும்
குடும்பங்கள் குதுகலம் கண்டிடவும்
இறை யேசுவின் இரக்கப் பெருக்கத்தால்
பாவம் இல்லா தூய வாழ்வால் – யாவரும்
நிலைத்திருந்து அன்புவழி சென்று
அறநெறியில் சமத்துவமாய் – வாழ
இலக்கணமாய் அமைந்திடவும்
ஜாதி, இன, மதவெறி, கலவரம்
போக்கிடும் நம்பிக்கை ஆண்டாய்
மலரட்டும் இனிதான இப்புத்தாண்டு

சிந்தனை சொல் செயல் யாவிலும் – நாடாள்
தலைவர்கள் மனித நேயம் காக்கவும்
தள்ளாத வயதிலும் உணர்வுகள் தடம் புரளாது – தம்
பிள்ளைகள் நினைவுடன் முதியோர் இல்லத்தில்
மன இருளுக்குள் வாழும் முதியோர் யாவரும் – நல்
வெளிச்சம் காணவும் பசி பிணிபோக்கிட
உலகத்தார் யாவருக்கும் உணவளிக்கும் – உழவர்
நிலை ஓங்கிடவும் தேவையான – நல்ல
மழை பெய்திடவும் – வரம்
தரும் இறை நம்பிக்கை ஆண்டாய்
மலரட்டும் இனிதான இப்புத்தாண்டு

**நன்றி**
**ஆக்கம்: செல்வி: சு. லூசியாமேரி**



# இறை இரக்கம்



**இறை இரக்கம் (தொடர்ச்சி)**

கடந்த இதழில் ஆனி 1934 வரை……தொடர்ந்து

**ஆடி 1934** – அந்த நாட்களில் இவவின் ஆன்மீக இயக்குனராகப் பணியாற்றிய அருட்பணி Sopocko இவவிடம் தினமும் "Divine Mercy in my Soul" என் ஆன்மாவின் இறை இரக்கம் என்ற தலைப்பில் எழுதி வைக்கும்படி பணித்துள்ளார்.

**ஆவணி 1934** – கடுமையான காச நோய், அஸ்மா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

ஐப்பசி 26 – 1934 – அருட்செல்வி Vilinius ஆலயத்தில் செபித்துக் கொண்டிருக்கும் வேளை இயேசு காட்சி கொடுத்தார். இயேசுவின் இதயத்திலிருந்து சிகப்பும், மங்கல் வெள்ளை நிற ஒளி கோவில் முழுவதும் பரவியது. இதைக் கண்ட தாதியர்கள், பயிற்சியாளர்கள் வெளி உலகிற்கு இச்செய்தியைப் பரப்பினர்.

திருமதி: லதா ரூபன்

சித்திரை 26 – 28 – 1935 - Kazimi Crowe நகரில் "Re Dwmption of the world" சபையினர் யூபிலி ஆண்டு கொண்டாடிய முடிவில் இறை இரக்கத் திருப்படம் Ostrabrama நகரிலுள்ள **Vilinius** இடத்தில் உள்ள " இறை இரக்க அன்னை" ஆலயத்திற்கு மாற்றப்பட்டது. இப்படம் மிக உயர்ந்த யன்னல் மீது வைத்து வெகு தொலைவில் இருந்து மக்கள் பார்க்கக்கூடியதாக வைத்தனர். இவ்வைபவம் கிறிஸ்து உயிர்ப்பு (Easter) தினத்தின் பின்வரும் இரண்டாம் ஞாயிறு என்றும் அன்றுதான் இறை இரக்க திருநாள் என்றும் குறிப்பிட்டுள்ளார். இதை ஆன்மீக இயக்குனர் அருட்பணி Sopocko வும் உறுதிப்படுத்தியுள்ளார்.

தை 8 – 1936 – அருட்செல்வி Faustina அந்நகர் ஆயர் Jalbrzy Kowski யைச் சந்தித்து இயேசு தன்னிடம் " ஒரு புதிய சபையை உருவாக்க வேண்டும்" என்று சொன்னதாக ஆயரிடம் கேட்டுள்ளார்.

மார்கழி 9 – 1936 - இல் கடுமையான சுகவீனமுற்றபடியால் Pradnik நகரில் உள்ள Krakow ஊரில் உள்ள காச (T.B) நோயாளர் விடுதியில் சேர்க்கப்பட்டு பங்குனி 27 – 1937 வரை இருந்துள்ளார்.

மார்கழி 13 – 1936 - இவவிற்கு பாவ மன்னிப்பு வழங்கும் அருட்பணியாளர் உருவில் யேசுவே வந்து இவவிற்கு பாவமன்னிப்பு வழங்கியதாக குறிப்பிட்டுள்ளார்.

சித்திரை 4 – 1937 – ஆன்மீக இயக்குனர் அருட்பணி Spocko " இறை இரக்கம்" பற்றிய விபரங்களை Vilinius நகரில் உள்ள கத்தோலிக்க வார இதழில் பகிரங்கப்படுத்தினர். அன்று அப்பகுதி பேராயர் Romuald Jalbrzy kowski யினால் இறை இரக்கத் திருப்படம் ஆசீர்வதிக்கப்பட்டு புனிதப்படுத்தப்பட்டு Vilinus நகரில் புனித மிக்கேல் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

**மீண்டும் தொடரும் …..**

# புனித பிரான்சிஸ் சவேரியார் பெரிய குருமட விழா

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை புனித பிரான்ஸிஸ் சவேரியார் பெரிய குருமட விழா 03ம் திகதி வெள்ளிக்கிழமை புனித பிரான்ஸிஸ் சவேரியாரின் திருவிழாவான்று அங்கு கொண்டாடப்பட்டது. யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் அவர்கள் தலைமையில் திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப் பட்டது. திருப்பலியை தொடர்ந்து மகிழ்வூட்டும் கள விளையாட்டுக்களும் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் யாழ் மறைமாவட்ட குருக்கள், குரு மட மாணவர்கள், விரிவுரையாளர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.





# புதிர் தோட்டம்.

1. வெள்ளை ராஜாவுக்கு கறுப்பு உடை. அது என்ன?
2. காற்றைக் குடித்து, காற்றில் பறப்பான். அவன் யார்?
3. நீல நிற மேடையிலே கோடி மலர் காயுது.
4. காற்றைக் குடித்து கைகளில் தவழும் ஓட்டம் நின்றால் போதும் ஆட்டம் நின்று போகும்.
5. அம்மா கொடுத்த தட்டிலே தண்ணீர் விட்டால் நிற்கவில்லை.
6. அந்தரத்திலே பறக்கும் பறவையும் அல்ல அழகான வாலுண்டு குரங்கும் அல்ல.
7. அத்துவானக் காட்டுக்குள்ளே குடைபிடிக்கிறார்.
8. நீலமேனி கொண்டவள், நிலம் சுற்றி அலைகிறான்.
9. முகம் பார்க்க வளரும் முடிவில்லாமல் தொடரும்
10. என்னைப் பார்த்தால், உன்னைக் காட்டுவேன்.

## புதிர் தோட்ட விடைகள்

1. உழுந்து
2. விண்மீன்கள்
3. பலூன்
4. ரத்தம்
5. தாமரை இலை
6. காற்றாடி
7. காளான்
8. கடல்
9. சொந்தம்
10. கண்ணாடி

# படித்ததில் பிடித்தது

நீங்கள் உங்கள் கையில் ஒரு கப் காப்பி வைத்திருக்கிறீர்கள். ஒருவர் அவசரத்தில் வந்து கப் காப்பி தட்டுப்பட்டு சிந்தி விட்டது.

தட்டிவிட்டது தவறு காப்பி சிந்தியது கவலைதான். ஒருவகையில் தவறு, என்ன காரணம்?

கப்பில் காப்பி இருந்த படியால் காபி சிந்தியது. தேநீர் இருந்தால், பழரசம் இருந்தால்? எது இருந்ததோ அதே சிந்தும்.

இதை வாழ்க்கையுடன் ஒப்பிட்டு அசைத்துப் பாருங்கள். வாழ்க்கையின் கடின நிகழ்வுகள் எமக்கு ஏற்படும் போது வெளியே சிந்த வேண்டியது என்னென்ன?

கோபம், மோசமான வார்த்தைகள் கசப்புணர்ச்சிகள், வன்செயல்கள், கெட்ட வார்த்தைகள்....

வாழ்க்கைக்கான கோப்பை நம்மிடமே உள்ளது. இதை அன்பு, நன்றி, மன்னிப்பு, மகிழ்ச்சி, கருணை, இங்கிதமான வார்த்தைகள் போன்றவற்றால் நிரப்பி வைத்திருந்தால், எம்மை யார் அசைத்தாலும் வெளியே சிந்துவது எல்லாம் நல்லவையாகவே இருக்கும். நல்லவற்றையே மனதிற்குள் நிரப்பி வைப்போம்.

நன்றி!

**Golda Ann Thanuja**



# தூய நற்கருணை



இந்தப் பாஸ்கா திருநாள் சடங்கில் இரண்டு பகுதிகள் உண்டு. ஒன்று ஆலய நிகழ்ச்சி. மற்றொன்று வீட்டு நிகழ்ச்சி. எருசலேம் நகரில் மட்டுமே கொண்டாடப்படும் இந்த விழாவிற்கு வந்திருக்கும் யூதர்கள் மதிய நேரத்தில் ஆலயத்தில் நடைபெறும் வழிபாட்டு நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார்கள். பின் மூன்று மணிக்கு ஆடுகளை வெட்டி பலி செலுத்துகின்றனர். ஆடுகள் எப்படி இருக்க வேண்டும், ஆட்டு இரத்தத்தை என்ன செய்ய வேண்டும் என்பதற்கெல்லாம் ஒழுங்குகள் இருந்தன. வெட்டி பலிகொடுக்கப்பட்ட ஆட்டின் இறைச்சியை தங்கள் வீடுகளுக்கு எடுத்து வந்தனர்.

**பாஸ்கா திருநிகழ்ச்சி :**

வீட்டில் நடக்கும் பாஸ்கா நிகழ்ச்சிக்கு குடும்பத் தலைவன் தான் குரு. வீட்டில் நெருக்கமான உறவினரையும் அழைக்கும் பழக்கம் இருந்தது, பெண்களும் இந்த நிகழ்ச்சியில் நிச்சயமாகக் கலந்திருக்க வேண்டும். இந்த நிகழ்ச்சியில் பல முறைகள் உண்டு. பல்வேறு பாடங்கள் உண்டு. நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்துவதை விட நிகழ்ச்சியின் முக்கிய அடையாளச் செயல்களைச் சுட்டிக் காட்டுவதே இந்தப்பகுதியின் நோக்கம்.


அப்பம் பிட்குதல் என்பது யூத கலாச்சார அடையாளம். குடும்பத்தலைவன் பந்தியில் அமர்ந்திருக்கும் மற்றவர்களை வரவேற்கும் பொருட்டு ஒரே அப்பத்தை எடுத்து பிட்டு உண்ணத் தருகிறார். இந்த நிகழ்ச்சி பந்தியில் அமர்ந்திருப்போர் இடையே உள்ள உறவுப் பிணைப்பை வெளிக்காட்டும் செயலாக அமைகிறது. பாஸ்கா நிகழ்ச்சியில் அப்பம் பிட்குதல் மூன்று இடங்களில் நடைபெறுகிறது. முதன்முதலாக வந்தவரை வரவேற்கும் பொருட்டு அப்பம் பிட்கப்படுகிறது.

இரண்டாவது முக்கிய உணவுக்கு முன் அப்பம் பிட்கப்படுகிறது. மூன்றாவது உணவு இறுதியில் மீதியான அப்பத்துண்டுகளைப் பிட்டு அனைவரும் பகிர்ந்து கொள்கின்றனர்.

பாஸ்கா நிகழ்வோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்ட விழா புளியாத அப்பத்திருநாள். யூதர்கள் கானான் நாட்டில் குடியேறிய பின் விவசாயப் பெருங்குடி மக்களாக மாறுகின்றனர். வாற்கோதுமையைப் பயிரிட்டு அதன் முதற்கனிகளை இறைவனுக்கு படைக்கின்ற நிகழ்ச்சியையும் பாஸ்கா நிகழ்ச்சியோடு இணைத்துக் கொண்டாடினர். பாஸ்கா விழாவில் புளியாத அப்பம் பயன்படுத்தப்பட்டது. தனித்தன்மையைக் காட்டுவதாக மட்டும் அது அமையவில்லை. பழையன கழிதல், புதியன புகுதல், என்ற புத்துணர்ச்சியின், புது வாழ்வின் அடையாளமாக அது அமைந்தது.

**G.RATHINI**

# சலேத் மாதா வரலாறு




(**La Salette**) சலேத் என்பது பிரான்ஸின் தென் கிழக்குப் பகுதியில் இருக்கும் நகர். இந்த நகரில் இருந்து 15 கி மீ தொலைவில் உள்ள ஒரு கோர்ப் (**corps** ) சிற்றூரில் மெலானி கால்வத் மேத்யூ (**Melanie Mathieu** என்னும் சிறுமி தன் பெற்றோரின் பத்து குழந்தைகளில் நான்காவது குழந்தையாக 1831 நவம்பர் 7 இல் பிறந்தாள். கல்வி, கலை, மறைக்கல்வி, திருவருட்சாதனம் எதுவுமே அறியாத ஏழைக் குடும்பம் அவளது குடும்பம். சிறு வயதிலேயே, கல்வி மறுக்கப்பட்டு, மாடு மேய்க்கச் சென்றாள். அதே ஊரில் உள்ள மேக்சிமின் ஜொரர்ட் என்பவனும் அவள் ஆடு மேய்க்கும் அதே பகுதியில் தன் முதலாளியின் மாடுகளை மேய்க்க வந்தான். இருவரும் ஆடு, மாடு மேய்க்க வந்த இடத்தில் நண்பர்களாயினர். மாதா காட்சி கொடுத்த அந்த ஆண்டில், மெலானிக்கு வயது 15. மேக்சிமின்னுக்கு வயது 11.

மெலானி மாதாவின் காட்சி குறித்துக் கூறியவற்றை அவரது வார்த்தையிலே வாசிப்போம்.

**1846 செப் 19 மாதாவின் காட்சி**

செப் 19 ம் தேதி என்னுடைய கால்நடைகளை மேய்ச்சலுக்கு ஓட்டிக் கொண்டு வந்தேன். அதே நேரத்தில் மேக்சிமினும் வந்தான். இருவரும் சேர்ந்தே மலையை நோக்கி நடந்தோம். மேக்சிமின் மிக நல்லவன். ரொம்ப எளிமையானவன். அவனிடம் பழக ஆரம்பித்தவுடன் நானே அவனிடம் வலிந்து பேச ஆரம்பித்தேன். மேக்சிமின் இயல்பிலேயே அனைவருடைய கருத்துக்கும் வளைந்து கொடுக்கக் கூடியவன். தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்ற சிந்தனை இல்லாதவன். எல்லா கருத்துக்களையும் ஏற்றுக் கொள்ளக் கூடியவன்.

அவன் ஒரு விளையாட்டை என்னிடம் கற்றுத் தரும்படி கேட்டான் அப்போது ஏற்கனவே நண்பகல் நெருங்கிக் கொண்டிருந்தது. நான் அவனிடம் பாரடைஸ் விளையாட்டு விளையாட சில பூக்களைப் பறிக்கச் சொன்னேன். அங்கு பல வண்ணங்களில் பல வகையான பூக்கள் இருந்தன. பாரடைஸ் விளையாட்டிற்காக கற்களை ஒன்றன் மீது ஒன்றாக அடுக்க ஆரம்பித்தோம் . அப்படிக் கற்களை அடுக்கிக் கோபுரமாகக் கட்டிய பிறகு, அதனை ஆல்ப்ஸ் மலையில் பூத்துக் குலுங்கும் பலவித பூக்களால் அழகு செய்தோம்.

அப்போது சரியாக நண்பகல் வேளை. கோயிலில் மூவேளை செபத்திற்காக மணி அடிப்பதைக் கேட்க முடிந்தது. அன்றைய பொழுதில் தட்ப வெப்பம் சீராக இருந்தது. வானத்தில் ஒரு மேகம் கூட இல்லை. மூவேளை செபத்திற்காக மணி அடித்தவுடன் முழந்தாளிட்டு எங்களுக்குத் தெரிந்த செபத்தை ஆண்டவரை நோக்கி செபித்தோம். மூவேளை செபத்திற்கு மணி அடித்தவுடன் எங்கள் கால்நடைகளுக்குத் தண்ணீர் காட்ட வேண்டும்.இதனை ஒரு வாய் வழிச் சட்டமாகவே மேக்சிமின்னுக்கு அவனுடைய முதலாளி கொடுத்திருந்தார் . எனவே ஜெபம் முடிந்தவுடன் மாடுகளை ஓட்டிக் கொண்டு நீரூற்றுக்குப் புறப்பட்டோம்.

அங்கே எல்லா நீரூற்றுகளும் வறண்டு போய் இருந்தன. பின்பு அங்கேயே அமர்ந்து மதிய உணவை உண்டு முடித்தவுடன் கற்களைப் பொறுக்கி சிறிய விளையாட்டு வீடு ஒன்று கட்டினோம். கீழ்தளத்தில் நாங்கள் இருப்பதற்கான வீடாகவும் மேல்தளத்தைப் பாரடைஸ் என்றும் சொல்லிக் கொண்டு கற்களை அடுக்கினோம்.பாரடைசைக் கட்டி முடித்தவுடன் தூங்கி விட்டோம். நண்பகல் 2. 30 க்கு நான் தான் முதலில் கண் விழித்தேன். என்னுடைய மாடுகளைக் காணவில்லை . மேக்சிமின்னை எழுப்பி இருவரும் சேர்ந்து தேடினோம். அவை வீட்டிற்க்குச் செல்லும் வழியில் மலைச்சரிவில் அமைதியாகப் புற்களை மேய்ந்து கொண்டிருந்தன


மாடுகளைக் கண்ட மகிழ்ச்சியில் நான் திரும்புகையில் ஒரு மாபெரும் ஒளி வெள்ளம் அந்த மலை, பள்ளத்தாக்கு, சமவெளி எங்கும் பரவியது . சூரியனை விட மிகப்பெரிய உருண்டை வடிவிலான ஒளி வெள்ளத்தைக் கண்ட நான் சப்தமாகக் கத்தி அழ ஆரம்பித்தேன் . அருகில் நின்று கொண்டிருந்த மேக்சிமின் ஓடி வந்து என்னுடைய கைகளைப் பற்றிக் கொண்டான் . பயத்தில் என்னுடைய கரங்கள் நடுங்குவதையும், உடல் அதிர்வதையும் கண்டு அவன் அஞ்சினான். பயத்தில் என்னுடைய கையில் இருந்த மாட்டை விரட்டும் குச்சி கை நழுவி கீழே விழுந்தது. அதைப் பார்த்த மேக்சிமின் " குச்சியைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள் . அது நமக்கு ஏதாவது தீங்கு செய்தது என்றால் நான் அதனைக் கடுமையாக அடிப்பேன் " என்றான்

ஒளி வெள்ளத்தைக் கண்டு " மேக்சிமின் .. அங்கே என்ன இருக்கிறது என்று உனக்கு ஏதாவது தெரிகிறதா ? ஐயோ .. என் கடவுளே " என்று கத்தினேன். அந்த நேரம் என்னுள்ளத்தை இனம் புரியாத அற்புதமான ஏதோ ஒன்று கடந்து சென்றது. ஏதோ ஒரு அற்புத சக்தி என்னைக் கவர்ந்து இழுப்பதாக உணர்ந்தேன். என் இதயம் வேகமாகத் துடிக்க ஆரம்பித்தது. அந்தப் பேரொளியை நான் உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்தேன். அது நிலையாய் அசைவற்று நின்றது. அந்த ஒளி வெள்ளம் திறந்தது . அதிலிருந்து அதை விட உன்னதமான பிரம்மிக்கத்தக்க மிக அற்புதமான ஒளி புறப்பட்டு வந்தது . அந்த ஒளியில் ஓர் அழகிய இளம்பெண் நாங்கள் கற்களால் செய்த பாரடைஸ் மீது அமர்ந்திருந்தார். அவருடைய தலை அவரது உள்ளங்கைகளில் பொதிந்திருந்தது .

**மிகுதி மறு இதழில்........**



# இல்லச் செழிப்பில் இளையோரின் பங்கு



## வேதியர் பேரா. தீ. ம. சந்தியாகு வேங்கடக்குளம், இந்தியா

**இளையோர் எதிர்கள் அல்ல, புதிர்கள்!**

அது ஒரு பேரூர், ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் அங்கு வசிக்கிறார்கள். அன்று அங்கு இளையோர் எழுச்சிப் பெருவிழா நடை பெற்றது அதில் பேருரையாற்றி அவ் விழாவினைச் சிறப்பிக்க அந்த மாவட்டத்தின் ஆட்சிப் பணியாளர் அமுதன் I. A. S. அழைக்கப்பட்டிருந்தார். அவ்விழாவில் ஏராளமான போட்டிகள், கண்கவர் கலைநிகழ்வுகள் இடம் பெற்றன. இறுதியில் உரையாற்ற வந்த ஆட்சியாளர் ஐந்து நிமிடங்கள் ஒன்றும் பேசவில்லை. அவரது கண்களிலிருந்து கண்ணீர் மட்டுமே கொட்டியது. பின்னர் ஒரு வழியாக பேச ஆரம்பித்தார். ஆம் அது பேச்சல்ல பகிர்வு. அதுவும் அவரது வாழ்க்கைப் பகிர்வு. அவர் தமது தொடக்கநிலை, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை மற்றும் கல்லூரிப் படிப்பு ஒவ்வொன்றிலுமே எதிர்நீச்சல் போட்டுத்தான் படித்திருந்தார். கல்விக்கூடத்திற்குப் போவதற்கு முன் அவர் மேற்கொள்ள வேண்டிய குடும்பப் பணிகள் ஏராளம். அத்தனை பணிகளையும் அவர் செய்து கடந்து வந்த பயணம் மிகக் கொடுமையானது. குறிப்பாக நடுநிலை, மேல்நிலைப் படிப்புக் காலகட்டத்தில 20 வீடுகளுக்குக் குறையாமல் பால் கொண்டு போய்க் கொடுத்து, விடியற்காலை முதலே 30 – 40 ஆடைகளை அயன்பாக்ஸ் வழியாகத் தேய்த்துக் கொடுத்து செய்தித்தாள்களை வினியோகித்தது, அதனால் ஏற்பட்ட விபத்துக்கள், காயங்கள் கொஞ்சமில்லை. இரண்டு தம்பிகளுக்கும் இரண்டு தங்கைகளுக்கும் அண்ணனாக இருந்து, இளம் வயதில் தந்தையரை இழந்து பட்ட துன்பங்கள் ஏராளம். காலையில் ஏழு கிலோ மீற்றர், மாலையில் ஏழு கிலோமீற்றர் நடந்து போய் நகரப் பள்ளியில் படித்தது எல்லாவற்றையும் கூறி அவரது கைகளிலும் கால்களிலும் பட்ட காயத்தழும்புகளைக் காட்டியபோது கூட்டத்தினர் கதறியழுதனர். அத்தனையும் தனது இல்லத்தின் முன்னேற்றத்திற்காக. இப்போது உடன் பிறப்புக்கள் எல்லோருமே நல்ல நிலையில் இருக்கிறார்கள். இவர் தனக்கு ஏற்பட்ட துன்பங்களை எதிர்களாகப் பார்க்கவில்லை மாறாகப் புதிர்களாகத்தான் பார்த்தார். இளையோரும் அப்படித்தான். அவர்கள் எதிர்கள் அல்லர், புதிர்கள்.

### அந்த நாள் ஞாபகம் வந்ததே ! வந்ததே !

2001ம் ஆண்டு நமது ஆன்மீகப் பணியகம் இயூஜின் இளையோர் ஒன்றுகூடல் ஒன்றை நடத்தியது. அதன் பிறகு சில நாட்களில் நம் ஆன்மீகப்பணியகத்திலிருந்து மிகப்பல இளையோர் கனடா நாட்டு டொரொண்டோவில் திருத்தந்தை பங்கேற்ற இளையோர் மாநாட்டிற்குச் செல்ல இருந்தனர். அந்த ஒன்றுகூடலுக்கு நான் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டு 45 நிமிடங்களுக்கு மேலாக “ வாழ்த்துச் சிறப்புரை” ஆற்றினேன். அப்போது நான் குறிப்பிட்ட இளையோர் நெருங்க முடியாத சக்தி அல்ல, மாறாக அவர்கள் நீக்க முடியாத புத்தியாளர்கள் எனற கருத்து எல்லோராலும் பாராட்டுப் பெற்றது. அப்புத்தியை இல்லச் செழிப்பிற்கு அர்ப்பணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதை நம் இளையோர் வெகுவாகச் சிந்தித்தனர். ஆம், நம் திருத்தந்தை இந்த ஆண்டைக் “ குடும்ப ஆண்டாக” அறிவித்துள்ளார். இதில் இளையோரின் பங்கு அளப்பெரியது.

### வீக்கம் வளர்ச்சியல்ல, நோக்கமே வளர்ச்சியாகும்

இன்றைய இளையோர் அடுத்தவரிடம் இருக்கும் கவர்ச்சிப் பொருள்கள் அத்தனையும் தம்மிடம் இருக்க வேண்டும் என்பதில் உறுதியுடன் செயல்படுகின்றனர். அதற்கேற்ற வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்ளவே துடிக்கின்றனர். அவர்கள் பார்வையில் அதில் பெரிதாக தவறிருப்பதாகத் தெரிவதில்லை. ஆனால் அவர்கள் வாழும் இல்லத்தின் நிலை, அவர்களது பெற்றோரின் பொருள் வளம் அதற்கு இடம் கொடுக்காதபோது, தம்மைப் பிறருடன் ஒப்பிட்டு தாழ்வு மனப்பான்மை என்ற மிகப்பெரிய நாசினிக்கு ஆளாகின்றனர். ஆம், நுகர்வு வெறியின் தாக்கம் அவர்களை இயல்பு நிலையிலிருந்து கனவு நிலைக்கு உந்தித் தள்ளுகிறது. அதனால் வெறுப்பில் தொடங்கி விரக்தியில் தொடர்ந்து விபரீத முடிவுகளுக்கும் உள்ளாகின்றனர். அதாவது பெரிதாக தெரிகின்ற மாயபிம்பத்தை உண்மையென்று கருதுகின்றனர். அவர்களுக்கு ‘ வீக்கம் வளர்ச்சியல்ல – நல்ல நோக்கமே வளர்ச்சி’ என்ற உள்ளுணர்ச்சி உண்டாக அவர்களது குடும்பம் பாடுபட வேண்டும். உளவியல் வல்லுனர்களின் உதவி கொண்டு கலந்துரையாடல் வழியாக (councelling) ஆற்றுப்படுத்த வேண்டும். அதற்கு இளையோர் ஏமாற்றத்தின் பிடியிலிருந்து இறங்கி வந்து நமது குடும்பம் நமது நலன் ஒன்றையே நாடி நிற்கிறது என்று நம்ப வேண்டும். இப்படித்தான் எத்தனையோ இளையோர் தங்கள் வாழ்வில் எதிர் நீச்சல் போட வேண்டிய காரியங்களை விவேகத்துடன் எதிர் கொள்கின்றனர். ஆம், ஆறாயிரம் ரூபாய்க்குக் குறையாத காலணி தனக்கு வேண்டும் என்று அடம் பிடித்த மகன், தம் தந்தையுடன் அக்கடை நோக்கிப் போகும் போது, திடீரென்று தனக்கு அது வேண்டாம், மிக மிக எளிய ஒன்றே போதும் எனக் கூறினான். அதற்கு அவன் கூறிய காரணம், அங்கே நடைபாதையில் ஒருவர் இருகால்களும் இல்லாமல் இறைவனைப் புகழ்ந்து பாடிக்கொண்டிருந்தார். அதனைப் பார்த்த மகன் இந்நிலையில் இவர் இவ்வளவு மகிழ்ந்திருக்க முடியுமென்றால், நல்ல கால்களையுடைய நான் ஏன் அடம்பிடிக்க வேண்டும் என்று உணர்ந்தான். ஆம், அந்நிகழ்வே சிறந்த ஆற்றுப்படுத்துதலைத் தந்தது.

தந்தது.

உலகளவில் நடத்தப்பட்ட ஆய்வொன்றின் புள்ளிவிபரம் பின்வருமாறு கூறுகிறது. ‘ எண்பது விழுக்காடு (80%) இல்லச்சிதைவுகளுக்குக் காரணம், குடும்பங்களில் இளையோருக்கும் மூத்தோருக்கும் இருக்கின்ற இடைவெளி பெரிதானதே’ என்று இந்த இடைவெளி எப்படிப் பெரிதாகின்றது? சற்று சிந்திக்க அழைக்கப்படுகின்றோம். அங்கே இயந்திரமயமாக்கப்பட்ட குடும்பச் சூழலில் நல்ல உரையாடலுக்கு இடமில்லை. அப்படியே சற்று நேரம் ஒதுக்கினாலும் இருதரப்பாலும் முன்சார்பு எண்ணத்தால் வடித்துக்கொண்ட தயார் நிலை (Readymade) கேள்விகளும் பதில்களும்தான் எதிரொலிக்கின்றன. ஆக்கபூர்வமான ஆரோக்கியமான உரையாடலுக்கு இடமில்லை. அதற்குக் காரணம் புரையோடிப்போன இவர்–இவள் இப்படித்தான் என்ற புரிந்துணர்தல்தான். ஆம் பெற்றோரும் பெரியோரும் கடினமாய் பாடுபட்டு , பெருந்தியாகம் மேற்கொண்டு பிள்ளைகளின் எதிர்காலமே தமக்கு நிம்மதியென்று வரிந்து கட்டிக் கொண்டு உழைப்பதையெல்லாம் இளையோர், அது அவர்களின் கடமை என்ற ஒற்றை வார்த்தைக்குள் உள்ளடக்கி விடுகின்றனர். பெரியோரும் பாசம் என்ற மேற்பூச்சுக்களாக (Coating) இளையோரை கட்டிப்போட நினைக்கின்றனர். அவர்களுக்கென்று தனி உள்ளம், தனி விருப்பம், தனிஆன்மா என்று ஒன்று உண்டு என்பதையே மறந்துவிடுகின்றனர்.

**கை கொடுக்கும் இளையோர்! கதவடைக்கும் மூத்தோர்**

‘ தொண்ணுாறு வயது மூத்தோருக்கு அறுபது வயது பிள்ளைகளும் அறியாச் சிறுவர்கள்’ என்ற எண்ணம்தான் அலைமோதும். இந்நிலை மாறவேண்டும் ஒன்றுபடுதலால், உணர்வால், உழைப்பால் கை கொடுக்க நெருங்கும் இளையோரைத் தமது மன இறுக்கத்தால், முடிந்த முடிவாக கொண்டிருக்கும் கருத்துக்களால் கதவடைப்புச் செய்வதை மூத்தோர் கைவிட வேண்டும்.

### இல்லச் செழிப்பே இலக்கு என்போம்!

நோக்கும் திசையெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் ஆண்டவர் ஆணைகொண்டு தம் இல்லம் செழிப்புற இளையோர் எழுச்சியுடன் பணியாற்ற வேண்டும். அதற்கான சிந்தனைக் கருவூலம் இதோ:–

**இணையற்ற இறைவேண்டல்:** ‘ கூடிச் செபிக்கும் குடும்பம் குலைந்து போகாது’ என்பது உலகோர் வாக்கு. “ இறைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள்” (1 தெச 5:17) என்று அழைக்கும் திருவிவிலிய வாக்கு “ நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும்” (யோவா 15:7) நம்பிக்கையூட்டும் இயேசுவின் குரல். எனவே இளையோரே என்றென்றும் இறைவேண்டலில் இணைந்திருங்கள்.

### விட்டுக்கொடுங்கள் அதுவே witness life:

தொடர் பிரச்சினைகளுக்கும், வாழ்வில் தொய்வு ஏற்படுவதற்கும் காரணம் ஒட்டுமொத்தக் குத்தகையாய் எல்லாம் எனக்கே என்ற பார்வைதான். தேவையானதை தேவையான சமயத்தில் விட்டுக்கொடுப்பது வெற்றிக்கான சான்று வாழ்வாகும். (லூாக் 10 : 38 – 42) மார்த்தா, மரியா வாழ்வு சிறந்த எடுத்துக்காட்டு

### சிகரம் தொட சிறந்த பண்பு உழைப்பே!

உலகம் உங்களைப் பார்த்து “ உழைப்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டு நீங்கள்” என்று கூற வேண்டும். அது உங்களது தனி வாழ்வுக்கன்று குடும்பத்தின் கூட்டு வாழ்வுக்கு (2 தெச 3 : 8 –12) உதவ வேண்டும்.

### பெற்றோரைப் போற்று, நற்பாதை காட்டு

பல ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் நடைபெற்ற அரும் நிகழ்வு இது. சரவணன் குடும்பம் காசி திருத்தலத்திற்கு அறுபது கிலோ மீற்றர் தொலைவில் வசித்தது. குடும்பத்தை வறுமை வாட்டியது. ஆனால் பெற்றோருக்கு எண்பது வயதிலும் அத் திருத்தலத்தைத் தரிசிக்க ஆசை. அதை மகனிடம் கூறினர். பெற்றோரால் நடக்க முடியாது, பேரூந்தில் பயணிக்க வசதியில்லை. நீண்ட வலுவான கோலில் இருபக்கங்களிலும் கூடையைக் கட்டி ஆளுக்கொரு பக்கம் பெற்றோரை அமர்த்தி, தூக்கியே சென்று பெற்றோரின் நேர்ச்சையை சரவணன் நிறைவேற்றினான். அவன் தனது பெற்றோர் மீது கொண்டிருந்த பாசத்தை உலகமே பாராட்டியது. ஆனால் இன்று நடப்பதென்ன? குறிப்பிட்ட வயதிற்குப் பின்னர் முதியோர் இல்லம் என்ற நிலை. (காண். 20 : 12)

### ஏற்றுக்கொள்! அதற்கேற்ப இதயத்தை மாற்றிக்கொள்.

இன்று இல்லறக் குடும்பங்களில் மிகப் பெரிய பஞ்சம் இந்த ஏற்றுக்கொள்வதில்தான் (காண். யோவா 1 : 11) இருக்கும் நிலையில் இல்லத்தார் அனைவரையும் ஏற்றுக்கொள்வது இளையோரின் இணையற்ற கடமையாகும்.

### திட்டமிடு! திரும்பிப்பார்!

லூாக்கா 14 : 28–32 பகுதியில் ஆண்டவர் இயேசு அழகாகக் கூறுகிறார். திட்டமிடுதலும் திரும்பிப் பார்த்தலும் எவ்வளவு அவசியம் என்று. இளையோரும் சரியான் திட்டமிடுதலில் வல்லவராகத் திகழ வேண்டும்.





# புனித பத்திரிசியார் (மார்ச் 17)



புனித பத்திரிசியார் பிரிட்டனில் உள்ள ஓர் உயர் குடியில் ஐக்கிய இராச்சியத்தில் 390 ஆம் ஆண்டு பிறந்தார்.

இவருடைய தந்தை கல்போனியஸ். இவருடைய தாய் கோன்செஷ்சா. பெற்றோர் அயர்லாந்து நாட்டில் பிரபல செல்வந்தரும், ஒரு கிறிஸ்தவ மத உரையாளருமாக இருந்தார். பட்றிக் இளம் வயதில் கல்வி கற்பதிலோ, ஆன்மீக செயல்களிலோ, பக்தி முயற்சிகளிலோ ஆர்வமின்றி வாழ்ந்தார். 440 AD யில் இவர் எழுதி வந்த பிரத்தியேக டயறியில் கல்வி நிலை, ஆன்மீக நிலை இல்லையென்று கவலையுடன் குறிப்பிட்டுள்ளார். இவருக்கு 16 வயது நடந்து கொண்டிருந்த போது அயர்லாந்தைக் சேர்ந்த ஒருசில முகமூடிக் கொள்ளையர்கள் இவரைக் கடத்திச் சென்று, அங்கே இருந்த ஒரு கனவானிடம் விற்று விட்டார்கள். அங்கே கனவானிடம் இருந்த ஆடுகளை மேய்த்து வந்தார். அந்தக் காலகட்டத்தில் எல்லாம் புனித பத்திரிசியார் போதிய உணவில்லாமல், சரியான ஆடையில்லாமல் மிகவும் கஷ்ரப்பட்டார். அப்போது அவர் கடவுளை மறந்து இப்படி வாழ்ந்ததனால்தான், அவர் இப்படித் தன்னை தண்டித்துவிட்டார் என்று மனம் வருந்தி அழுது, அன்றிலிருந்து அவர் இறைவனிடம் ஜெபிக்கத் தொடங்கினார்.

ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு ஒருநாள் அவருக்கு ஒரு கனவு வந்தது. அந்தக் கனவில் அவர் அங்கிருந்து தப்பித்து, சொந்த நாட்டுக்குப் போகும்படியாக வந்தது. எனவே, அவர் தான் வேலை பார்த்துக் கொண்டிருந்த கணவானிடமிருந்து தப்பித்து, ஒரு கப்பல் வழியாக தன்னுடைய சொந்த நாட்டிற்குச் சென்றார். தன்னுடைய பெற்றோர்களோடு அங்கே மகிழ்ச்சியாக இருந்தார். நாட்கள் சென்றன. அவருக்கு குருவாக மாறவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. எனவே, அவர் குருவாகப் படித்து பிரான்ஸ் நாட்டில் சில காலம் பணிசெய்தார். ஒருநாள் அவருக்கு மீண்டுமாக ஒரு கனவு வந்தது. அந்தக் கனவில், அயர்லாந்தைச் சேர்ந்த ஒரு மனிதன் அவரை அணுகிவந்து, "எங்களுடைய நாட்டிற்கு வந்து கிறிஸ்துவைப் பற்றி அறிவி" என்று சொல்லி விட்டு மறைந்து போனார். கனவிலிருந்து விழித்தெழுந்த பேட்ரிக், அப்போது திருத்தந்தையாக இருந்த முதலாம் ஜெலஸ்டின் என்பவரைத் சந்தித்து தன்னுடைய கனவை, விருப்பத்தை எடுத்துரைத்தார். இதற்கிடையில் ஏற்கனவே அயர்லாந்து நாட்டிற்கு மறைபோதகப் பணியை ஆற்றச் சென்ற பலேடியஸ் என்பவர், அங்கு பல்வேறு எதிர்ப்பு வந்ததால் நாடு திரும்பி இருந்தார். இப்போது பேட்ரிக் அயர்லாந்துக்கு சென்று, மறைபோதகப் பணியை ஆற்றப் போவதாகச் சொன்னதைக் கேட்டதும் அவர் பெரிதும் மகிழ்ந்து போனார். எனவே, திருத்தந்தை பேட்ரிக்கை உளமகிழ்வோடு அனுப்பி வைத்தார். பத்திரிசியார் கப்பில் பயணம் செய்து அயர்லாந்தில் உள்ள தென்பகுதிச் சென்றார். தென்பகுதில் இருந்த மக்கள் அவரை விரட்டி விட்டார்கள். எனவே அவர் வடபகுதிச் சென்று நற்செய்தி அறிவிக்கத் தொடங்கினார். அப்பகுதியிலும் அவருக்கு பல்வேறு எதிர்ப்புகள் வந்தன. ஆனாலும் அவர் அங்கு மன உறுதியோடு இருந்து பணிசெய்தார். ஆண்டவர் இயேசு பற்றிய நற்செய்தியை எல்லா மக்களுக்கும் எடுத்துரைத்தார். நோயாளிகளைக் குணப்படுத்தினார். பார்வை இழந்தவர்களுக்கு பார்வை அளித்தார். இறந்த ஒன்பது பேரை உயிர்த்தெழச் செய்தார் (அவருடைய வாழ்க்கைக் குறிப்பில் இது சொல்லப்பட்டிருக்கிறது). இப்படியாக அவர் அயர்லாந்து நாட்டில் கிறிஸ்தவம் படிப்படியாக பரவுவதற்குக் காரணமாக இருந்தார்.

அயர்லாந்தில் வேற்று தெய்வ வழிபாடு அதிகமாகவே இருந்தது. எனவே பத்திரிசியார் அதனைத் துணிவோடு எதிர்கொண்டு வெற்றிகொண்டார். இவருடைய பணிகளைப் பார்த்த திருத்தந்தை, மேலும் மூன்று கர்தினால்களை அங்கு அனுப்பி வைத்து, அவருக்குப் பேருதவியாக இருக்கச் செய்தார். பத்திரிசியார் செய்த மிகச் சிறப்பான காரியம், அந்த நாட்டிலேயே குருக்கள், துறவறத்தாரை தோன்றச் செய்து அந்நாடு முழுவதும் நற்செய்தி பரவக் காரணமாக இருந்தார். இதற்காக அவர் பல்வேறுமுறை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு சித்ரவதை செய்யப்பட்டார். ஆனாலும் கிறிஸ்துவின் மீது கொண்ட பற்றினால் எல்லாவற்றையும் மிகவும் பொறுமையோடு ஏற்றுக் கொண்டார். இப்படியாக தன்னுடைய உடல், பொருள் ஆவி அத்தனையும் அயர்லாந்து மண்ணில் நற்செய்தி பரவுவதற்காக அர்பணித்த பேட்ரிக் 461 ஆண்டு தன்னுடைய எழுபத்தி இரண்டாம் வயதில் இந்த மண்ணுலக வாழ்வு விட்டுப் பிரிந்து சென்றார்.

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்: பரமேஸ்வரி செல்வராசா

மண்ணில் 22-08-1942

விண்ணில் 11-03-2020



வருடம் இரண்டாகிற்று இம் மண்ணை விட்டு நீ சென்று
நீ வென்ற மனங்களை விட்டு சென்றிடந்தான் முடியுமோ!
தூண்டில் மீனாய் துடிக்கின்றேனம்மா
மற்றவர் துயர் கண்டு துடிப்பவளே!
உந்தன் செல்வங்கள் கதறுகின்றனவே!
அணைக்க மறந்ததேன் அவர்களை
என்ன தவறு செய்தனர் இம்மண்ணில்
மரணிக்கவில்லையம்மா - நீரிப்போ
மௌனமாய் உறங்குகின்றீர் கண்மூடி
பிரிவென்று உமக்கில்லை மண்ணில்
பரிவோடு எம் பக்கம் இருக்கின்றீர்
இப்படித்தான் எண்ணிக் கொள்ளுவோம்
போகும் வழியில் நாமிணையும் வரை......

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

பிள்ளைகள் பேரப்பிள்ளைகள்
மருமக்கள் சகோதரர்கள்

# புனித செபஸ்தியார் (தை 20)



பிரான்ஸ் நாட்டிலுள்ள நற்போனில், செபஸ்தியார் உயர் குடும்பத்தில் பிறந்தார். மிலானில் கல்வி கற்று 283–ம் ஆண்டில் உரோமைப் பேரரசன் கறினுசின் படையில் சேர்ந்து சிறந்த படைவீரர் ஆனார். அவர் வாழ்ந்த காலம் வேதகலாபனை காலம். சிறையில் அடைபட்டு நொந்தவர்களுக்கு ஆறுதல் கூறி தொண்டு செய்வதே தனது கடமையாகக் கொண்டார்.

ஏற்கனவே செபஸ்தியாரால் வேதத்தில் சேர்ந்திருந்த மாற்குஸ்மார் செலியானுஸ் என்ற இரு சகோதரர்கள் சிறை வேதனையால் வேத விசுவாவசத்தை கைவிடும் நிலையில் ஆவியினால் தூண்டப்பட்டு அருள்வாக்கு உரைத்தார். செவிமடுத்த சகோதரர்கள் விசுவாசத்தில் உறுதிகொண்டனர். ஆறு ஆண்டுகள் ஊமையாக இருந்த சிறை அதிகாரியான நிகோஸ்கிராத்துவின் மனைவி சோயேஎன்பவள் செபஸ்தியாரின் பாதங்களைப் பற்றினாள். அவளுக்காக் செபிக்கத் தொடங்கி அவள் வாயில் சிலுவையை வரைய அவள் வாய் திறக்கப்பட்டு பேசத் தொடங்கினாள். அவள் மனம்மாறி கிறிஸ்த்தவ மறையில் சேர்ந்தாள். அவள் கணவன் சூலை நோயால் துன்பப்பட்டான். போதனையின் முடிவில் கிறிஸ்தவன் ஆனான். நோய் நீங்கியது.

நாட்கள் நகர்ந்தன. உரோமைப் பேரரசனுக்கு எவராலும் குணப்படுத்த முடியாத நோய் வந்தது. செபஸ்தியாரின் வேண்டுதலால் பிணி நீங்கியது. சிறையில் அடைபட்டுக்கிடந்த 1400 புதுக் கிறிஸ்தவர்களை பேரரசன் விடுவித்தான். கிறிஸ்தவர்களுக்கு சுபீட்சம் வந்தது. இந்நிலை நெடுநாள் நீடிக்கவில்லை. 283–ல் தியோக்கிலேசியன் உரோமைப் பேரரசன் ஆனான். செபஸ்தியாரின் நற்பண்புகளாலும் நெஞ்சுறுதியாலும் கவர்ந்திழுக்கப்பட்டு அவரை தன் மெய்காப்பாளராக ஆக்கினான். இவ்வேளை காய்யூஸ் என்ற திருத்தந்தையிடம் செபஸ்தியார் அறிமுகப்படுத்தப்பட்டார்.

தளபதியான புல்பியன், அரசனிடம் செபஸ்தியார் ஒரு கிறிஸ்தவர் என்று கூற அரசன் அதிர்ச்சி அடைந்தான். “ தன் உப்பைத் தின்று தனக்குப் பிடிக்காத கிறிஸ்தவ மறையில் வாழும் செபஸ்தியார் நன்றி மறந்தவர்” என்று பழி சுமத்தினான் அரசன். “ இறைவனின் திருவிளத்திற்கேற்ப நடந்து அரசர்களின் நலனுக்காகப் பாடுபடுவதே என் பணி” என்று செபஸ்தியார் சாந்தமாகக் கூறினார். கோபாவேசம் கொண்ட அரசன் கம்பத்தில் கட்டி அம்புகளால் செபஸ்தியாரைத் துளைக்கும்படி ஆணையிட்டான். இறந்தார் என் எண்ணி காவலர்கள் போய்விட்டனர். கிரேனாள் என்ற பெண் அடக்கம் செய்யலாம் என நினைத்து, இரவில் வந்து பார்க்க செபஸ்தியார் உயிருடன் இருந்தார். இரகசியமாய் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று குணப்படுத்தினாள். குணமடைந்தபின் எவர் சொல்லியும் கேளாது பகிரங்கமாகவே கிறிஸ்தவராக வாழ்ந்து கிறிஸ்தவர்களின் விடுதலைக்குப் போராடினார். ஒரு சமயம் அரசனை எதிர்கொள்ளவே இவர் இன்னும் உயிர் வாழ்வது கண்டு ஆச்சரியப்பட்டு “ என் முன் நிற்பது செபஸ்தியார்” ? என்று கேட்டான் அரசன். “ நீர் கிறிஸ்தவர்களை துன்புறுத்துகிறீர் என உலகம் அறியும் பொருட்டு இயேசு என்னை உயிரோடு காப்பாற்றினார்” என்றார் செபஸ்தியார். அரசன் வெகுண்டெழுந்தான். இவரை தடிகளால் அடித்துக் கொல்ல கட்டளையிட்டான். இறப்புக்கு முன் தன் வேண்டுதலினால் உரோமையில் பரவிய விஷ நோயும் கிறிஸ்தவர்களின் மத்தியில் நிலவிய வைசூரி, பஞ்சம், கொள்ளை நோயும் நீங்குமாறு செய்தார். சேவகர்கள் 288–ஆம் ஆண்டு ஜனவரி 20–ஆம் நாள் இவரைப் பிடித்து தடிகளால் அடிக்க மறைசாட்சியாக மரித்தார். லூசினாள் என்ற பெண் இவர் உடலை எடுத்து வந்து புனித இராயப்பர், சின்னப்பர் கல்லறை வாயிலில் அடக்கம் செய்தாள்.

## கவிதை

ஒவ்வொரு இழப்பும்,
ஒவ்வொரு கதை சொல்லும்,
ஓடித் திரிந்தோம்,
ஓடியோடி உழைத்தோம்,
ஓடியாடிக் கழித்தோம்,
ஒன்றாக வாழ்ந்தோம்,
ஒரு நொடிப்பொழுதில்,
ஒன்றுமே இல்லாமல்,
ஒருவனாய்ப் போவோம்,
ஒன்றுமே இல்லை இவ்வுலகில்,
ஒன்றுமே எம்மோடு வராது,
ஒன்றே குலம்
ஒருவனே இறைவன் உணர்வாய்,
ஒற்றுமை ஒன்றே உனக்கு
ஔடதம்,
இதை அருந்தி, மனிதத்தை நேசி.

இத்தனையும் உணர்வோம்
ஒருவர் இழப்பில்,
அத்தனையும் மறப்போம்
அவர் மண்ணில் போனபின்,
மீண்டும் மனம் குரங்காகும்
தாவித் தாவி..
ஆசை கொள்வோம்
அனைத்திலும்....
புலம் பெயர்ந்து வந்த எமக்கு
புதிய புதிய உறவுகள்
புதுப்புது நண்பர்கள்
புதிதாக அறிமுகமானார்கள்,
ஒவ்வொரு நிகழ்விலும்
ஒருவரை ஒருவர் சந்தித்து
பற்பல பேசி,
பகிடிகள் கூறி,
பலதும் பகிர்ந்து வாழ,
படைத்தவன் நமக்கு
அருள் செய்தான்,
இழப்புப் பெருந் துயர்,
நாமொன்று நினைக்க,
நமக்கு மேலிருப்பவன்
வேறொன்று நினைக்கிறான்,
அவன் நினைப்பு என்றுமே மாறாது,
உன் உயிர் கடன்,
கடனைத் திருப்பித் தா என்றால்,
நாம் மறுத்தாலும் முடியாதே...

ரஞ்சிதம்



### திருந்து! திருத்து!

பிறர் மீது குற்றம் கண்டுபிடிப்பது ஒருவேளை திருத்தும் கண்ணோட்டமாயின், முதலில் உம்மீது உள்ள குற்றத்தைத் தினம் ஆராய்ந்து திருத்துதல் நன்று. குடும்பம் என்ற ஆலமரம் சாலச்சிறந்தாக விளங்க, உண்மையான குற்றங்கள் குறைக்கப்படுதல் அவசியம். (காண். மத் 7 : 1–5)

இப்படி ஏராளமான இனிய எளிய அணுகுமுறைகள் இருக்கின்றன. இளையோர் தம் இல்லத்தைச் செழிப்புள்ளதாக்க இயன்றவரை முயன்று செயல்பட இனிய அழைப்புக்கள்.

### திருத்தந்தை அழைக்கின்றார் திருக்குடும்பம் அமைத்திடவே!

குடும்பங்கள் மட்டிலும் குறிப்பாக இளையோர் மீதும் தனி அக்கறை கொண்ட திருத்தந்தையர்கள் தங்களது ஆவணங்களாகிய அன்பின் மகிழ்ச்சி, கிறிஸ்து வாழ்கிறார் ஆகியவற்றின் வழியாக திருக்குடும்ப வாழ்வு வாழவும், திருத்தூதுப்பணி சிறக்கவும் அரிய கருத்துக்களை வழங்கியுள்ளார்கள். மிகவும் தகுந்த தருணத்தில் இவ்வாண்டை குடும்ப ஆண்டாக அறிவித்து சிறந்த செயலாக்கத்திற்குத் தூண்டி துணை நிற்கும் நமது திருத்தந்தை பல சிறந்த அணுகுமுறைகளையும் வெளிப்படுத்தியுள்ளார். அவற்றில் சிறப்பாக 1. உழைப்பும் ஒத்துழைப்பும் 2. காலத்தின் அறிகுறிகளை ஆராய்ந்து செயல்படல் 3. திருக்குடும்ப பண்புகளை வாழ்வாக்குதல். 4. சறுக்கலில்லாத சான்று வாழ்வு ஆகியவை முக்கியமானவை.

மலர்ந்திருக்கும் இப் புத்தாண்டில் நம்மில் மறைந்திருக்கும் ஆற்றல்கள் வெளிப்படட்டும். அவற்றால் இளையோர் வாழ்வு மலர்ச்சியும் (**flourish**) மகிழ்ச்சியும் (**Joy**) நிறைந்ததாக அமையட்டும் நல் வாழ்த்துக்கள்!

அன்புடன் வேதியர். பேரா. சந்தியோகு

# தாழ தலைவன் பெறுவோம்! தகுத்துணைவன் பெறுவோம்!

...தியர். பேரா. தி.ம.சந்தியாகு, வேங்கடதளம், இந்தியா.

அழைப்புகள் எத்தனையோ! ஆர்வங்கள் எத்தனையோ! அத்தனையும் நம்புலனை அசைப்பதில்லை உண்மையிது!
பிழைப்புக்கள் எத்தனையோ! பேரங்கள் எத்தனையோ! பின்புற வாசல்கள் பிளக்கின்ற காட்சி கண்டோம்!
உழைப்புகள் எத்தனையோ! ஊடல்கள் எத்தனையோ! ஒன்றுக்கும் உதவாமல் ஒழிந்த நிலை கண்டோம்!
தழைப்புகள் எத்தனையோ! தவிப்புகள் எத்தனையோ! தந்தைஇறை தம்கரத்தால் தாங்கிய கொடை கண்டோம்!
இவ்வாண்டை திருத்தந்தை இல்லறத்தின் ஆண்டாக எடுத்தோதி அழைக்கின்றார். இணைந்தே வந்திடுவோம்!
கவ்விடும் இருள் நம்மை கடுகளவும் குலைக்காமல் காத்திடும் வழிமுறையைக் கற்பிக்க அழைக்கின்றார்!
வெவ்வேறு குணம் படைத்த வேற்று மனிதர்கள் நாம் வெற்றியை இலக்காக்கி விரைந்தே வந்திடுவோம்!
சவ்வாது மனம்போல சகலருக்கும் உறவாகிச் சரித்திரம் படைத்திடவே சகமுழுதும் திரண்டிடுவோம்!

எண்ணற்ற இலக்கியங்கள், இயம்பிடும் கருத்துரைகள் எல்லாமும் நாம் கற்று இல்லறத்தை ஒளியாக்க கண்ணுற்று விரைந்திடுவோம்! காலத்தை வென்றிடுவோம்! கடவுள் தரும் கொடையை காலமெல்லாம் காத்திடுவோம். மண்ணற்று, மரமற்று, மனதினிலே உரமற்று மனமகிழ்ந்து வாழ்வோர்க்கு மடிதன்னில் இடமளிப்போம்! விண்ணற்று வெறும் கையால் வேதாந்தம் கதைப்போர்க்கும் விவேகத்தைக் கற்பித்து வேதனை தணித்திடுவோம். குடும்ப ஆண்டு இதில் கொள்கைத் தீபங்களை கொணரும் யுக்திகளைக் கொடுக்கும் திருஅவையை கடும்பல வார்த்தைகளால் காய்ச்சி எடுக்காமல் கனிவு தினம் பொங்க காத்து வரவேற்போம்! கொடுமை செயல் மறைய, குடும்பம் ஒளிபரப்ப, கூறும் அறிவுரைகள் கொடுக்கும் கருத்துக்கள் நடும்பல நன்மணிகள், நாளும் பலன் கொடுக்கும் நாடி நலம் பெறுவோம்! நயந்து வளம் பெறுவோம்!
பிறந்திருக்கும் புத்தாண்டில் பிழைகள் மறையட்டும்! பேரருள் பொங்கட்டும்! பெருவாழ்வு நிலைக்கட்டும்!
திறந்திருக்கும் புத்தகமாய் தினந்தோறும் மலரட்டும்! தேனன்ன திருவாழ்வு திசையெங்கும் தொடரட்டும்!
சிறந்திருக்கும் எண்ணங்கள் சிறகடித்துப் பறக்கட்டும்! சினப்புயல் மறையட்டும்! சீர்தூக்கிப் பார்க்கட்டும்!
கறந்திருக்கும் பால் போல கனிவெங்கும் நிறையட்டும்! கடவுள் துணை தாங்கி நமை காசினியோர் வாழ்த்தட்டும்!

3ம் பக்கத் தொடர்ச்சி பக்தி நூல்கள் வாசிப்பு

எனது தாத்தா தனது 75வது பிறந்தநாளுக்கு அவர், எந்த வருடம் தவக்காலத்தில் எந்த புத்தகத்தை வாசித்தேன், அதில் எந்தக் கருத்து தன்னைக் கவர்ந்தது என குறிப்பு எழுதி வந்ததைக் காட்டினார். நாமும் தவக்காலத்தில் திருவிவிலியம், அறநெறி நூல்கள் ஆகியவற்றை வாசிக்க வேண்டும். அப்போதுதான் நாம் பிறர் வாசிக்கும் நற்புத்தகமாக வாழ்வோம்.

### திருப்பலி அருளடையாளங்களில் பங்கேற்பு

மற்ற காலங்களை விட தவக்காலத்தில்தான் நமக்கு ஏகப்பட்ட சோதனைகள் ஊற்றெடுக்கும். அவற்றின் கட்டுக்களை அவிழ்த்தெறிய திருப்பலி, வழிபாடுகள், அருளடையாளக் கொண்டாட்டங்கள், கருத்தமர்வுகள் ஆகியவற்றில் உரிய முறையில் பங்கேற்க வேண்டும்.


### பொங்கட்டும் புதுவாழ்வு, தங்கட்டும் தரணியெங்கும்

மக்களுள் பலர் தவக்காலத்தில் உண்மையான தோற்ற மாற்றம் பெற்று தூயவாழ்வின் கண்ணாடியாகத் திகழ்வர். ஆனால் காலம் மாறியதும் கடைப்பிடித்து வந்த நற்குணங்கள் காணாமல் போய்விடும். பழைய குருடி கதவைத்திறடி என்ற பழங்கதையாய் பழைய வாழ்விற்குத் திரும்பி விடுகின்றனர். இது சரியன்று. எவரும் சேற்றில் புரள்வதும் பின்னர் ஆற்றில் தவழ்வதுமாகவே இருத்தலாகாது. ஒளி பெற்றவர்கள் அதிலே தொடர வேண்டும். அப்போதுதான் பெற்ற புதுவாழ்வு எப்போதும் தங்கும்.




## உறவுகள் 80க்கான சிறுவர் விவிலிய பதில்கள்

1. பழைய ஏற்பாடு-46 புதிய ஏற்பாடு - 27 மொத்தம் 73 புத்தகங்கள்
2. ஒளி.
3. ஆதாம் - ஏவாள்
4. மண்ணால் ஆனான்.
5. ஏரோது அரசன்
6. கடவுள் நம்முடன் இருக்கிறார்.
7. ஏதேன் தோட்டத்தில்
8. மனிதனின் விலா எலும்பிலிருந்து
9. வாழ்வின் மரம், நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரம்
10 பெண் (ஏவாள்)




எனது பெயர் ஜெஸ்லின்.
எனது வயது 9.
எனது அப்பாவின் பெயர் யூட்.
எனது அம்மாவின் பெயர் வத்சலா.
எனக்கு இரண்டு அக்கா ஒரு தம்பி.
நான் CE2 படிக்கின்றேன்.
நடனம் பயில்கின்றேன், தமிழ் படிக்கின்றேன்.
சட்டத்தரணியாக படிக்க விரும்புகின்றேன்.

பாலன் பிறந்தார்.

பாலன் பிறந்தார். யேசு பாலன் பிறந்தார்.
நடுநிசியில் யேசு பாலன் பிறந்தார்.
இடையர்கள், மூன்று அரசர்கள் புடை சூழ்ந்து
அவரை வணங்கினார்கள்.
வணங்கச் செல்வோம் பாலன் பிறந்தார் யேசு
பாலன் பிறந்தார்.


ஜெஸ்லின் யூட்.



எனது பெயர் றோஸ் மிஸ்ரிக்கா, எனக்கு
14/11/2021 11 வயது, நான் தமிழ் விரும்பி
படிக்கிறேன், நான் நடனம் பழகிறேன்,
எனக்கு பாட்டும் விரும்பம், எனக்கு
ஒரு தம்பியும், தங்கையும், இருக்கிறார்கள்,
நான் திருப்பலிக்கு, போவேன்,
செபமாலை சொல்லுவோம், நன்றி.

Rose. Mistika.

தேவ இரகசியத்தின்
றோஜா



எனது பெயர் ஜோனாதன்.
எனது அப்பாவின் பெயர் தூசைப்பிள்ளை.
எனது அம்மாவின் பெயர் மேனகா.
எனது வயது 14. எனக்கு இரண்டு அக்கா
ஜோசி, ஜோவன்னா.
நான் collègeயில் படிக்கின்றேன்.
நாம் தமிழ் சோலையில் தமிழ் படிக்கின்றேன்.
எனக்கு பிடித்த விளையாட்டு காலப்பந்து.
எனக்கு பிடித்த பாடம் கணிதம்.

### சின்னக் கரங்களே!

இப்பகுதியை அலங்கரிக்க உங்கள் கையால் வரைந்த வண்ணச் சித்திரங்களை எதிர்பார்க்கின்றோம். எனவே தயங்காமல் உங்கள் சித்திரங்களை எமக்கு அனுப்ப மறவாதீர்கள்......





## பணித்தலத்தின் சில பதிவுகள்





Blanc mesnil செபமாலை மாதா பணித்தளவிழா






Chelles சதாசகாயமாதா பணித்தளவிழா







எமது ஆன்மீகப் பணியகவிழா